விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 23 சனிக்கிழமை (08.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325




# இராணுவத்தின் வெற்றிக்கு அதிக பலம் தேவைப்படும்

## அமெ.கொமாண்டர் தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கைப் பாதுகாப்பு படையினரால் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளில் முழுமையாக வெற்றியடைவதற்கு மேலும் அதிக பலம் தேவைப்படுவதாக அமெரிக்க இராணுவக் கொமாண்டர் திமொத்தி கேட்டிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரச படையினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் திருப்தி அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் (14ஆம் பக்கம் பார்க்க)

# மனவேதனையில் கலைஞர்! இராஜினாமா செய்ய முடிவு?

(சென்னை)



இலங்கை விவகாரத்தில் தன்னை அனைத்துத் தரப்பினரும் குறை கூறுவதால் மன வருத்தமடைந்த முதல்வர் கருணாநிதி தனது பதவியை இராஜினாமாச் செய்ய முடிவு செய்ததாக தெரிகிறது.

இதையடுத்து மூத்த தி.மு.க தலைவர்களும் அமைச்சர்களும் கோட்டைக்கு விரைந்து அவரைச் சமாதானப் படுத்தினர். இது குறித்து தெரியவருவதாவது, முதல்வர் இராஜினாமாச் செய்தியால் நேற்று முன்தினம் கோட்டையில் (14ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி அரசியல் தீர்வுகாண வலியுறுத்தல்

## உடனடித் தீர்வுக்கு சாத்தியமாம்

(புதுடில்லி)

**நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் இலங்கை நிலவரத்துக்கு உடனடி அரசியல் தீர்வாக ராஜீவ்-ஜே.ஆர். ஆகியோருக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இந்தியா அறிவுறுத்தியுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.** (14ஆம் பக்கம் பார்க்க)

# எறிகணைத் தாக்குதல்களால் 12 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

(வவுனியா)

படையினரின் செறிவான எறிகணைத் தாக்குதல்களால் பூநகரி செம்மண் குன்றுப் பகுதியில் இருந்து 12 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் மீண்டும் இடம்பெயர்கின்றனர்.

படையினர் கிராஞ்சி -வலைப்பாடு உள்ளிட்ட பகுதிகள் மீது செறிவான எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியதால் அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்து செம்மண் குன்றில் அடைக்கலம் அடைந்திருந்தனர்.

செம்மண் குன்றுப் பகுதி மீது படையினர் செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தி வரும் நிலையில் அங்கிருந்து அந்த மக்கள் அனைவரும் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளனர். நடந்தும்,மோட்டார் சைக்கிள், மாட்டு வண்டில்கள், உழுவூர்திகளிலும் அப்பகுதி மக்கள் இரவு-பகலாக வெயிலிலும் பனியிலும் இடம்பெயர்கின்றனர். (14ஆம் பக்கம் பார்க்க)

# காலநேரம் சரியாக வரும்போது பதில் படை நடவடிக்கை தொடரும்

## பா.நடேசன் குமுதத்துக்குப் பேட்டி

(சென்னை)

காலநேரம் சரியாக வரும்போது படையினருக்கு எதிரான பதில் நடவடிக்கைகள் தொடரும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழகத்தில் இருந்து வெளிவரும் குமுதம் (12.11,2008) வார இதழுக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவம் முன்னேறி வரும் நிலையிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் முற்று முழுதாக இன்னும் யுத்தத்தில் குதிக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்தப் பின்வாங்கலுக்கு என்ன காரணம்?

எமது மக்களை பாதுகாப்பதற்காக நாம் எவ்வாறான தியாகங் (14ஆம் பக்கம் பார்க்க)



# 11ஆம் திகதி முதல் பஸ்கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

இம்மாதம் 11ஆம் திகதி முதல் பஸ் கட்டணங்கள் குறைக்கப்படுவதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் டீசலின் விலை 30 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதால் தேசிய பஸ் கட்டணக் கொள்கைக்கு ஏற்ப இம்மாதம் 11 ஆம் திகதி முதல் பஸ் கட்டணத்தைக் குறைக்க தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

அதன்படி 7-10 ரூபாவுக்கு ஒரு ரூபா, 14-20ரூபாவுக்கு 2., 23-28 ரூபாவுக்கு 3, 30-44 (14ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களவர்களுக்குச் சொந்தமான 4 கடைகள் முஸ்லிம்களால் அடித்து நொருக்கப்பட்டன

(கொழும்பு)

கொழும்பு பஞ்சிகாவத்தையில் சிங்களவர்களுக்குச் சொந்தமான நான்கு கடைகள் முஸ்லிம்களினால் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. வாகனம் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்து,பௌத்த, கிறிஸ்தவ மற்றும் பள்ளிவாசல்கள் போன்ற மத வழிபாட்டுத் தலங்களில் ஒலி பெருக்கிகளை பிரதேச மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பெரிய சத்தமாக பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படும் என சுற்றாடல் இயற்கைவள அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியிருந்தார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னரே சிங்களவர்களுக்குச் சொந்தமான கடைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

மருதானைப் பள்ளிவாசலில் தொழுகை முடிந்ததும் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு (14ஆம் பக்கம் பார்க்க)

# வரவு-செலவு திட்ட வாக்கெடுப்புக்கு ஆதரவாகவும் எதிராகவும் பிரசாரம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களிக்குமாறு மூத்த அமைச்சர்களும் எதிராக வாக்களிக்குமாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய ஐந்து கட்சிகள் எதிர்த்து வாக்களிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆராய்வதற்கு இந்த கட்சிகளின் செயற்குழு கூட்டம் விரைவில் நடைபெறும் என கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஆதரவாகவா எதிராகவா வாக்களிப்பது என்பது தொடர்பில் இன்னமும் எதுவும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை, அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் (14ஆம் பக்கம் பார்க்க)

## மூத்தோருக்கான பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறைமன்றத்தினர் யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி கோயில் தேரடி சித்தர்செல்லப்பா சுவாமிகளின் நினைவாலய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கும் புதன்கிழமை மாலை 4.30மணிக்கும் மூத்தோருக்கான தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடாத்தி வருகின்றனர்.

துறைசார் ஆதீன திருமுறைத் தோன்றல், தேவார இசைமணி தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் இப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடாத்தி வருகின்றார்.

பயிற்சிபெற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றி பயன்பெறலாம் பன்னிரு திருமுறைப் பதிகங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற பாடல்கள் பயிற்சி, ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓதுவது, மகோற்சவ கால கொடியேற்றம், நவசந்தி பண்கள் ஓதுவது பற்றியும் பயிற்சியளிக்கப்படும். (ஓ)

## அழியாத கோலங்கள் நூல் வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபை (புலோலி) தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தும் "புத்தகம் ஒரு சமுதாயம்" எனும்நிகழ்வும் நூற்றாண்டு கண்காட்சியும் புலோலி பொது நூலகத்தில் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை10 மணியளவில் பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் சந்திரமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் க. தம்பையா எழுதிய "அழியாத கோலங்கள்" எனும் நூலை இளைப்பாறிய பிரதேச செயலாளர் வே. வீரபத்திரபிள்ளை வெளியிட்டு வைப்பார்.(ஓ)

## மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சர்வதோய நிறுவனத்தினரால் படித்துவிட்டு வேலையற்று இருக்கும் 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கும் சுயதொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு இணுவில் "மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி" இம் மாதம் இறுதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப் பயிற்சியில் பயிற்சிபெற விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9மணிமுதல் 2மணி வரை இணுவில் மருதனார்மடம் சந்தியில் உள்ள சர்வோதய தெழிற் பயிற்சி நிறுவன அலுவலகத்தில் நடைபெறும் என்று சர்வோதய மாவட்ட இணைப்பாளர் இ. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி 6 மாதங்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4-134)

## புதிய சித்திரத்தேர் கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகருக்கு இன்று சனிக்கிழமை காலை 9.40 முதல் 10.25 வரையான சுப வேளையில் சித்திரத் தேர் உருவாக்குவதற்காக கால்கோள் விழா நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் நாள் வேலையை ஆரம்பித்து வைப்பார். (ஓ)

## அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் இதுவரை பதிவு செய்யப்படாத கிராம அபிவிருத்திச் சங்கங்கள்,மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவை தம்மை பதிவுசெய்துகொள்ள இம் மாதம் 15 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதிக்குள் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்ள புதிய யாப்பின் படி பதிவினை மேற்கொள்ளாத சங்கங்களின் நிதி மற்றும் ஒப்பந்த வேலைகள் போன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் பதிவினை மேற்கொண்ட சங்கங்கள் மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் அந்தந்த மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களங்களில் பதியும் படி அறிவுறுத்தப்பட்டிருந்தன. அதன் படி தென்மராட்சியில் அவ்வாறு விண்ணப்பித்த சங்கங்களில் 47 சங்கங்களுக்கு புதிய பதிவிலக்கம் வழங்கப்பட்டுள்ளது. மிகுதிச் சங்கங்கள் கால நிர்ணயத்துக்குள் பதிய வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## கிராம அபிவிருத்தி அமைப்புக்களிற்கான நிதி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதி உதவியுடன் தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் மீள் எழுச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் சமூக முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 25 இலக்கு கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றில் கிராம அபிவிருத்தி புனரமைப்புக்காக கிராம அபிவிருத்தி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இவ் கிராம அபிவிருத்தி அமைப்பிற்கு இயல் அளவு விருத்திக்காக முதல் கட்ட நிதி வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 11மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பிரதம விருந்தினரான யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இவ் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர்,ஆ.சிவசுவாமி, இலங்கை உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## கௌரவிப்பு விழா

புலோலி ப.நோ.கூட்டுறவு சங்க எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் எட்டு பாடசாலைகளில் 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை யில் சித்தியடைந்த 42மாணவர்களை கௌரவிக்கும் விழாஎதிர்வரும்15 ஆம் திகதி சனிக்கிழமை 9மணியளவில்சங்கத்த லைவர் ந.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரமதவிருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் அவர்களும் சிறப்பு விருந்தினறாக பருத்தித்துறை பிரதேச செயலக இ.வரதீஸ்வரன் மற்றும் மக்கள் வங்கி பிரதேச செயலகஇ.வரதீஸ்வரன் மற்றும் மக்கள் வங்கி முகாமையாளர் பருத்தித்துறை கிளை மு.சிவகணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-35)

## சித்தன்கேணியில் கடை உடைத்துத் திருட்டு

(சித்தன்கேணி)

சித்தன்கேணி சந்தியில் அமைந்துள்ள கடையில் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு வேளையில் இனந் தெரியாதவர்களால் கூரை உடைக்கப்பட்டு பணம் மற்றும் பால் மா வகைப் பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள் ஆகியன சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிய வருகின்றது. (ஓ-17)

### சி.சி.எவ்.சி. ஸ்தாபன அனுசரணையில்

## உடுவில் மகளிர் கல்லூரியில் புதிய கணனி ஆய்வுகூடம்

(வட்டுக்கோட்டை)

உடுவில் மகளிர் கல்லூரியில் 1971-1981 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அதிபராக கடமையாற்றிய மறைந்த முன்னாள் அதிபர் திருமதி. சரஸ்வதி சோமசுந்தரத்தின் ஞாபகார்த்தமாக புதிய கணனி ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

இக் கணனி ஆய்வுகூடத்தினை கனடா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கைக்கான அபிவிருத்திப் பணிப்பாளராகிய சாள்ஸ் பாக்கர் கல்லூரி சமூகத்தின் கரகோசத்தின் மத்தியில் கோலாகலமாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் ஷிராணி மில்ஸ் அவர்கள் உரையாற்றுகையில், கல்லூரி முன்னாள் அதிபர் ஞாபகார்த்தமாக அவர் பத்து வருடம் இக் கல்லூரியில் ஆற்றிய அரும்பணியை கௌரவித்து கல்லூரியில் கடமையாற்றிய காலப் பகுதி கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் முக்கிய கட்டம் என்பதை நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அதிபர் CCFC ஸ்தாபனத்திற்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்குமிடையேயான நீண்டகால நட்புறவை நினைவுகூர்ந்ததுடன் இந்த ஸ்தாபனம் மூலம் நன்மைகள் பெற்ற பல மாணவர்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்த துடன் மேலும் நட்பின் அடையாளமாக உயர்தொழில் நுட்பக் கல்விக்காக ஒரு கட்டடத்தைக் கட்டி அதனுடன் கல்வியைப் பெறும்படி உதவி செய்தமைக் காக CCFC நிறுவனத்திற்கு கல்லூரி சமூகத் தின் நன்றிகளை தெரிவித்துக்கொண்டார்.



ஆய்வுகூட திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கனேடிய அரச பிரதிநிதி சாள்ஸ்பாக்கருடன் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களைப் படத்தில் காணலாம்.


மேலும் இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதம விருந்தினரான சாள்ஸ் பார்க்கர் இலங்கையின் தெற்கு , கிழக்கு, மேற்கு ஆகிய இடங் களில் கனேடிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற் திட்டங்களை தான் பார்வையிட்ட தாகவும் வடக்கிற்கு தான் வந்ததில்லை எனவும் இந்த நிகழ்வின் காரணமாக இங்கு வந்துள்ளதாகவும் இது தனது வாழ்வின் மறக்கமுடியாத முக்கிய நிகழ்வென்றும் இவ் இரு நாடுகளுக்கிடையேயான உறவுப் பாலம் நெடுங்காலமாக உள்ளது என்பதை தெளிவுபடுத்தும் வைப்வமாக இன்றைய நிகழ்ச்சி அமைகின்றதெனவும் கூறினார்.

மேலும் அவர் தனது உரையில் உயர் தொழில்நுட்ப உலகினில் கணனிகள் இன்று எங்வளவு முக்கியமானது என்பதை நான் நன்கு அறிவேன்.ஆகையினால் இதில் கற்றுத் தேவையை நிறைவு செய்யும் மாணவரின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாகக் கூறினார்.

அத்துடன் இந்நிகழ்வில் சிறப்பம்சமாக கலைநிகழ்வுகளும்,மேற்படி கட்டட அமைப்பில் ஈடுபட்ட கட்டடத் தொழிலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (ஓ-27)



தென்மராட்சி வலயக் கல்விப் பிரிவினரால் சாவ.மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்ட ஆசிரிய முன்சேவைப் பயிற்சியின் போது இணைப்பாளர் க.சிவசுப்பிரமணியம் உரையாற்றுவதையும், கோட்டக் கல்வி அதிகாரி நா.சத்தியநாதன், தென்மராட்சி வலயக் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், உதவி கல்விப் பணிப்பாளர்கள் கோ.வரதராஜமூர்த்தி, பி.முத்துலிங்கம் மற்றும் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவத்திரை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (படங்கள்:சாவ.நிருபர்)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்ச்சித் தொடரில் மறவனூர் V.T.Mகுழுவினரின் (வாசகர்) மேளக் கச்சேரி இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.

## யாழ்.செய்திகள்

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக், அதில் அங்கம் வகிக்கும் கழக அணிகளுக்கு இடையில், நீண்ட கால இடை வெளியின் பின் , 11 வீரர்கள் பங்குபற்றும் "தவிர்த்தல்" முறையிலான உதைபந்தாட்ட போட்டியினை நடாத்தவுள்ளது.இம்முறை இப் போட்டியில் கலந்துகொள்ள 18 அணிகள்விண்ணப்பித்துள்ளதாக போட்டிக் குழுத் தலைவர் ஏ.சுரேந்திரன் தெரி வித்துள்ளார்.

மேலும் இம்முறை போட்டிகள் யாவும் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக ஆடுகளத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இப் போட்டித் தொடரின் முதல் போட்டி நாளை மறுநாள் திங்கட்கிழமை சென்றோக்ஸ் A பிரிவு அணிக் கும், பாரதி A பிரிவு அணிக்குமிடையில் பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார். (ஓ-110)

# இன்று ஒரு தகவல்

## சோழர்கால தேர்தல்

நல்லவேளை.... நாமெல்லாம் சோழர் காலத்தில் பிறக்காமல் தப்பித்தோம் – என்றார் நண்பர் ஒருவர்.

ஏன் அப்படிச் சொல்றீங்க? என்று கேட்டேன்.

"அப்பொழுது நம்மைப் போன்றவர்கள் தேர்தலில் நிற்கவே முடியாது!" என்றார்.

"அப்படியா சொல்றீங்க?" என்று கேட்டேன்.

"ஆமாம் சோழர் கால விதிகளைப் பற்றி ஒரு புத்தகத்தில் பார்த்தேன் ஒருவர் தேர்தலில் வேட்பாளராக நிற்க வேண்டுமானால் அவருக்கு சில தகுதிகள் இருக்கவேண்டும்."

முதல் தகுதி : அவர் வரி செலுத்தப்படும் வீட்டின் சொந்தக்காரராக இருக்கவேண்டும்.

இரண்டாவது தகுதி : அவருக்கு தன் நிலத்திலேயே கட்டப்பட்ட சொந்த வீடு இருக்கவேண்டும்.

மூன்றாவது தகுதி: அவருக்கு வயது 30 இற்கும் 60இற்கும் இடையில் இருக்கவேண்டும்.

நான்காவது தகுதி: தூய்மையான நெறியும் வாய்மையும் உள்ளவராக இருக்கவேண்டும்.

இந்தத்தகுதிகள் எல்லாம் உள்ள ஒருவர் தான் தேர்தலில் நிற்கமுடியும்.

எப்படிப்பட்டவரெல்லாம் தேர்தலில் நிற்க முடியாது என்பது கூட அந்தப் புத்தகத்தில் இருக்கிறது.

அவர் எந்த ஒரு வாரியத்திலும் கடந்த மூன்று ஆண்டுகளாக அங்கத்தினராக இருக்கக்கூடாது.

ஊழல்,வன்முறை, தீமைச்செயல்களில் ஈடுபட்டிருக்கக் கூடாது. அதேசமயம் அவ்வாறு ஈடுபடுபவர்களின் உறவினர்களாகவும் இருக்கக்கூடாது.

தங்களுடைய பாவங்களுக்கு பிராயச்சித்தம் செய்திருந்தால் கூட அவர்கள் வேட்பாளராகவோ வாக்காளராகவே இருப்பதற்கு அருகதையற்றவர்கள்.

ஒருதடவை தவறு செய்தவர்கள் என்னதான் பரிகாரம் செய்தாலும் அவர் தேர்தலிலும் நிற்கமுடியாது. ஓட்டும்போட முடியாது.

இந்த விதிமுறைகள் இப்பொழுதிருந்தால் நானோ, நண்பனோ தேர்தலில் நெருங்கவே முடியாது. பேசாமல் ஒதுங்கிப் போய்விடவேண்டியது தான் .

இருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் பொதுவாழ்க்கைக்கு வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

இருபதாம் நூற்றாண்டு காலத்தில் ஒரு தேசத்தில் இராணுவ ஆட்சி நடந்து கொண்டிருந்தது. மக்களெல்லாம் குறை சொல்ல ஆரம்பித்தார்கள். நம் நாட்டில் ஜனநாயகம் இல்லை என்றார்கள். இது இராணுவத் தலைவரின் காதிலும் விழுந்தது.

அவர் உடனே வெளி உலகத்தை திருப்திப் படுத்துவதற்காக ஒரு தேர்தல் நடத்தினார். வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றி இராணுவ வீரர்களே வாக்குச் சீட்டுக்களில் முத்திரை குத்திப் போட்டார்கள்.

வாக்கு எண்ணிக்கை நடந்தது.

இறுதியில் எல்லா ஓட்டும் அவருக்கே விழுந்தது. இடையில் ஒரு ஓட்டு எதிர்க்கட்சிக்கு விழுந்தது. உடனே இராணுவத் தலைவர் பத்திரிகையாளர்களைப் பார்த்து சொன்னார்: "பார்த்தீர்களா"? என்னுடைய ஆட்சியில் ஜனநாயகம் இல்லை என்றீர்களே எதிர்கட்சிக்கும் ஒரு ஓட்டு விழுந்திருக்கு ! என்றார் முகமலர்ச்சியுடன் ! கொஞ்சநேரத்தில் இன்னொரு ஓட்டும் எதிர்கட்சிக்கு விழுந்தது. இதைப் பார்த்த இராணுவ அதிகாரிக்குக் கோபம் வந்துவிட்டது. "திருட்டுப்பயல்....ஒருத்தனே இரண்டு ஓட்டு போட்டிருக்கிறான்!" என்று சொல்லிக்கொண்டே எழுந்து சென்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# யாழ். விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புலோலியிலுள்ள கமநல அபிவிருத்தி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி) சி.சிவகுமார், பரு. கால்நடை வைத்தியர் எஸ். வசீகரன், கௌரவ விருந்தினர்களாக புலோலி கமநல அபிவிருத்தி நிலைய பெரும்பாக உத்தியோகத்தர், ச.உருத்திரேஸ்வரன் , வடமராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் (விவசாயம்) அ.கி. மனுநீதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 8 தலைப்புகளில் கீழ் போட்டியிட்டு வெற்றியீட்டிய 24 விவசாயிகள் விவசாயப் போதனாசிரியர் சொ. சிவகுமார். தலைமையில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் உதவி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் விழாவின் நோக்கம் பற்றியும் பாடவிதான உத்தியோகத்தர் கி. சௌந்தரராஜன் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்ற விவசாயிகளின் அனுபவ பகிர்வினையும் வழங்கவுள்ளனர்.

மேலும் விழா மண்டபத்தில் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப தகவல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்படும். அத்துடன் புதியரக விதை பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்று கௌரவிக்கப்பட உள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**சிறந்த நெல் உற்பத்தியாளர் :** சின்னக்குட்டி செல்லையா– துன்னாலை வடக்கு, வல்லி சின்னராசா–வல்லிபுரம், ஆழ்வான் மார்க்கண்டு–துன்னா லை வடக்கு,

**சிறந்த வெற்றிலைச் செய்கையாளர்:** கி. முருகேசு– கெருடாவில் தெற்கு, மு. பஞ்சலிங்கம்– கெருடாவில் தெற்கு, சி. துரைராசா - கெருடாவில் தெற்கு

**சிறந்த 'சுயவிதைநெல் உற்பத்தியாளர்:** கணபதி கிட்ணன் - வல்லிபுரம், செல்லமுத்து ஜெகநாதன் துன்னாலை வடக்கு, குலசேகரம் அலைமேல் தொண்டமானாறு தெற்கு, **சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர் :** கதிர்காமு கோபாலகிருஸ்ணன் - பொலிகண்டி கிழக்கு, ஆறுமுகம் தங்கவேல் - புலோலி மேற்கு, சிவராசா உருத்திரகுமார்– கெருடாவில் கிழக்கு,

**சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி:** கோணன் யோகராணி –புலோலி மேற்கு, நடராஜா கெங்காதேவி– கெருடாவில் வடக்கு, குணசிங்கம் மங்கையர்திலகம்– கெருடாவில் கிழக்கு,

**சிறந்த சோளச் செய்கையாளர்:** ரேணுகா சோதிலிங்கம் –கெருடாவில் தெற்கு, இரமசாமி இரத்தினசிங்கம் –கெருடாவில் தெற்கு, சின்னத்துரை குணலிங்கம் கெருடாவில் கிழக்கு,

**சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர் :** மு. கலாதரன் –வியாபாரிமூலை, ஆ. சிறீரங்கநாயகி –வல்லிபுரம் , ப. பரராசசிங்கம் –வல்லிபுரம்,

**சிறந்த குரக்கன் செய்கையாளர் :** க. குலசிங்கம் கெருடாவில் தெற்கு, ஆ. குணபாலசிங்கம்– கெருடாவில தெற்கு, க. சிவகுமார் - புலோலி மேற்கு.

## குடாநாடு முழுவதும் இன்று பகல் மின்தடை

சுன்னாகம் மின் வழங்கல் பாதையில் அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ். குடாநாடு முழுவதும் மின் தடை ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர் முத்துரட்ணானந்தம் தெரிவித் துள்ளார். (ஓ-6)

## இராசி பலன்

08.11.2008
(ஐப்பசி 23 , சனிக்கிழமை)
சதயம் பிற்பகல்2.53மணிவரை
தசமி முன்னிரவு 7.05மணிவரை
இராகுகாலம் 9.05-10.35மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | இஷ்டசித்தி, தொழில்லாபம், குடும்ப மகிழ்ச்சி, பெருமை யடைதல் |
| இடபம் | தொழில் நன்மை, நல்ல செய்தி, மேன்மை , முயற்சிகைகூடும் |
| மிதுனம் | உடல் உழைப்பு, புதிய திட்டமிடல்,பெரியோர் உதவி, இடமாற்றம் |
| கடகம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல் , போசனசுகம், உடல்நலக்குறைவு |
| சிங்கம் | கௌரவமான நிலை, பணவருவாய், எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம் |
| கன்னி | திடீர் பயணம், முயற்சிகை கூடும் , தேக நலன் நல்ல மரியாதை |
| துலாம் | வியாபார நன்மை,முயற்சி தாமதம், புத்திரரால் கவலை, பணவிரயம் |
| விருச்சிகம் | பயந்த சுபாவம் ,புதியவிடயம், விரும்பாத உறவு , சுபநிகழ்வு |
| தனுசு | இனியஅனுபவம், புதிய பொருள் சேர்க்கை, நல்ல முயற்சி, வாக்குமேன்மை |
| மகரம் | மாதர் நட்பு, காரியதாமதம், கடினவார்த்தை , பணவிரயம் |
| கும்பம் | பெரியோர் சந்திப்பு,ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், போசன நன்மை |
| மீனம் | உறவினர் சந்திப்பு, மனக் குழப்பம், பிரயாணம் காரிய தாமதம் |

வளவன்

# இலங்கைக் கடற்படையினருக்கு கப்பம் வழங்கியே இந்திய மீனவர்கள் தொழிலைத் தொடரும் நிலை

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினருக்கு பல்வேறு உணவுப் பொருட்களை கப்பமாக வழங்கி மீன்பிடி நடவடிக்கைகளை தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக மீனவர்கள் கடற்பரப்பில் மீன் பிடிப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் போது இலங்கை கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டு தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் கடற்படையினருக்கு சுக்கு கோப்பி போன்றவற்றையும் கப்பமாக வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பொட்டுக் கடலை சிற்றுண்டிகள் பயறு உள்ளிட்ட சில பொருட்களையும் கடற்படையினர் மீனவர்களிடம் கோரிவருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.


(இ)

## தரம் 9 பாடநூல் தயாரித்தல்

(கொழும்பு)

திருத்தியமைக்கப்பட்ட பாடவிதானத்திற்கு ஏற்ப தரம் 9பாட நூல்களை தயாரிப்பதற்காக திறமை வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரிப்படிவங்கள் யாழ் கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் உள்ளது. தகுதியுடையோர் அதனைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4)




யாழ். மத்திய கல்லூரியில் சாரணர் இயக்கத்தின் 92ஆவது ஆண்டுநிறைவு தினத்தையொட்டி மலர்வெளியீடும் சாரணர்களுக்கான போட்டிகளும் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி . அ.வேதநாயகம் பேச்சுப்போட்டியில் முதலாமிடம் பெற்ற மாணவன் எஸ். செந்தூரதாஸிற்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கை வங்கியின்

விடைகொடுக்கிறோம் வரவேற்கிறோம்





**B.A.அருமைநாயகம்**

**N.சிவரட்ணம்**

செய்யும் தொழிலே தெய்வமாய்
வங்கி வாழ்வில் ஏணியாய்
வாடிக்கையாளர் நலன் பேணி
வங்கிக் கிளைகள் அனைத்துமே
கணனி வலைப் பின்னலுக்குள்
அமைத்துத் தந்த அருமைநாயகம் - ஐயா
அவர்களை ஓய்வுபெறும் நாளிதனில்
வாழ்த்துவம் வாழிய பல்லாண்டு

செயற்திறன் வீரனாய்
தொட்ட பணி யாவினும்
வெற்றி பெறும் நாயகன்
சிவரட்ணம் ஐயா அவர்களை
உள்ளம் கனிந்து உவகையுடன்
உதவிப் பொதுமுகாமையாளர் - தரத்துக்கு
உயர்ந்தமை எண்ணி வாஞ்சையுடன்
வாழ்த்துவம் வாழிய பல்லாண்டு

**எமது முன்னேற்றத்துக்குப் பல வழிகளில் உதவியவரும் ஆலோசனைகளை வழங்கியவருமான B.A.அருமைநாயகம் அவர்களின் ஓய்வுக் காலம் நல்ல முறையில் அமைய வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதுடன், புதிய உதவிப்பொது முகாமையாளராகப் பதவியேற்கும் N.சிவரட்ணம் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துவதுடன் அவரின் உதவிகள், ஆலோசனைகளை வேண்டி நிற்கின்றோம்.**

PCP
PC PARK (PVT) LTD

LCC
LANKA COMMERCIAL CONSTRUCTION

MEGA GAME ZONE

PIRAJEET TRANSPORT

**கனனி உலகின் இராஜ கிரீடம்**

(C-1767)

# நோத்முதல் கோபல்லவா வரை 147



## டொனமூர் திருத்தம் பற்றிய விவாதம்

இலங்கைக் குடிசனத்தொகை 1931 ஆம் ஆண்டில் இருந்த அமைப்பு பின் வருமாறு, சிங்களவர்-3473029, தமிழர்-1417477, சோனகர்-325913, பறங்கியரும் பிறரும் - 32315, மலாயர்- 15977, ஐரோப்பியர்-9254, வேடரும் பிறரும் - 32000

### டொனமூர் கண்ட அரசாங்க சபை

முன்னர் கோல்புறூக் கண்ட சட்டசபை இலங்கையில் 1833 ஆம் ஆண்டு தொடக்கம் 1931 ஆம் ஆண்டு வரையும் நிலவியது. காலத்துக்குக் காலம் 1889, 1910, 1920, 1924 முதலாய ஆண்டுகளில் ஏற்பட்ட சிற்சில சிறு மாற்றங்களை விட அந்தச் சட்டசபையின் அடிப்படையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற மந்திரியாருக்குக் கட்டுப்பட்ட ஆள்பதியும், அவருக்கு உதவியாக இருந்த உத்தியோக அங்கத்தவராய ஆங்கிலேயருக்குமே எல்லா விதமான அதிகாரங்களும் இருந்தன. அவர்கள் காலத்துக்குக் காலம் கட்டளைச் சட்டங்கள் மூலம் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் அதிகரித்துக் கொண்டார்களே அல்லாமல். இலங்கை வாசிகளை ஆட்சியதிகாரத்தில் இருத்திப் பழக்கினார்களல்லர்.

அருணாசலம் கேம்பிரிஜ் சர்வகலாசாலைப் படிப்போடு குடியியற் சேவையிற் பல்லாண்டு கடமையாற்றி அனுபவம் பெற்றவராயிருந்த போதிலும், குடியேற்றக் காரியதரிசியாக

**மீள் பார்வை**

உத்தியோக உயர்வுபெறவில்லை. அன்றி ஒரு மாகாண அதிபராக நியமனம் பெறவுமில்லை. இராமநாதன் தலைசிறந்த சட்ட அறிஞர் நாயகம் என ஆங்கிலேயரான பிரதம நீதியரசர்களாற் பாராட்டப் பெற்றவர். அவர் வெகு திறமையாகச் சட்டத்துறை நாயகத்தின் கடமைகளையும் பார்த்தவர். ஆனால் அவரை வெள்ளைக்காரர் சட்டக் காரியதரிசியாகவோ உயர் நீதியரசராகவோ பதவியில் உயர்த்தவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் இலங்கையர் என்பதேயாம்.

டொனமூர் கண்ட அரசாங்க சபையின் வண்ணம் அமைந்த அரசாங்கத்திலேயும் ஆங்கிலேயரிடமே பிடி இருந்தது. இலங்கையருக்கு ஒரு சில துறைகளில் சுயநிர்ணய உரிமை வழக்கப்பட்டது. ஆங்கிலேயரே பிரதான பொறுப்புக்களைத் தமது பரிபாலனத்தில் வைத்திருந்தனர். இலங்கையின் பகிரங்க சேவையுட்பட்ட பரிபாலன முறையையும். நிதிபரிபாலனத்தையும், நீதிபரிபாலனத்தையும் முறையே பிரதம காரியதரிசி, நிதிக் காரியதரிசி, சட்டக் காரியதரிசி ஆகிய அரசாங்க உத்தியோக அங்கத்தவரே பரிபாலித்தனர். அவர்கள் குடியேற்ற மந்திரியாரால் நியமிக்கப்பட்ட ஆங்கிலேயராயே ஆரம்ப காலங்களிலிருந்தனர். இரண்டாவது உலக மகாயுத்த நெருக்கடிகளுக்குப் பின்னரே முதன் முதலாக சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் நிதிக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்.

### மேன்மை தங்கிய ஆள்பதி அவர்கள்

இலங்கை அரசாங்கத்தின் அச்சாணி ஆள்பதி அவர்களே, இலங்கை அரசாங்கம் என்னும் போது அது ஆள்பதியின் அரசாங்கம் எனவே கூறப்படும். மக்கள் அரசாங்கம் என்றோ எங்கள் அரசாங்கம் என்றோ, கட்சி அரசாங்கம் என்றோ அக்காலத்தில் அது வழங்கவில்லை. மக்களுக்கு அதிகாரிகளின் அரசாங்கம் எனவே அது அமைந்திருந்தது. ஆள்பதி முடியின் பிரதிநிதியெனவே அவருடைய உரிமையோலையில் குறிக்கப்படுவது வழக்கம். அவருக்கு முடியின் பெயரால் அதிகாரம் வழங்கப்பட்டது. அரசாங்கம் சம்பந்தமான எல்லாப் பொறுப்புக்களும் அதிகாரங்களும் ஆள்பதியின் தோளிலேயே சுமத்தப்பட்டன. அரசாங்கம் என்பது ஆள்பதியின் ஆட்சியேயாம்.

பூரண சுயாட்சி செய்வதற்கு இலங்கையருக்குப் போதிய பயிற்சி இல்லாமையால் அவர்களுக்கு ஆட்சிப் பொறுப்பில் ஒரு பகுதியையே டொனமூர் குழுவினர் வழங்கினர். ஆகவே ஆள்பதிக்கு இதுகாறும் இருந்து வந்த அதிகாரம் மாற்றியமைக்கப்பட

**க.சி.குலரத்தினம்**

வேண்டியதாயிற்று. அதிகாரமும் பொறுப்பும் இடம் மாறியமையும் காலத்தில் பல பிரச்சினைகள் ஏற்படலமாகையால் அவற்றைத் தீர்த்து நிலைமையச் சீராக்குவதற்காக ஆள்பதிக்குச் சிறப்பதிகாரம் வழங்கப்படலாயிற்று. இச் சிறப்பதிகாரம் ஒதுக்கதிகாரமாக இருந்ததேயல்லாமல் நிர்வாக அதிகாரமாக இருக்கவில்லை. எனவே அரசாங்கத்தின் பாரம் ஆள்பதியின் தோளில் மாத்திரம் இருக்கவில்லை. அரசாங்கத்தின் ஒரு பாகத்துக்குப் பொறுப்பாக ஆள்பதியும், ஒரு பாகத்துக்குப் பொறுப்பாக மக்கள் பிரதிநிதிகளும் அமர்ந்தனர். (தொடரும்)




வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக சிறுவர் முதியோர் தின விழாவை சிறுமியொருத்தி மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், மாணவிகள் இறைகீதம் இசைப்பதையும், யாழ்.சாந்திகம் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை உரையாற்றுவதையும், பிரதம விருந்தினரான யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் முதியவரொருவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்த பின் விழாத் தலைவரான பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பரு.நிருபர்)

# இலங்கையில் நீதிமன்ற அமைப்பு 5



### 6.ஆரம்ப நீதிமன்றம் (Primary Court)

ஆரம்ப நீதிமன்றத்தினால் முதல் கட்ட சிறிய குற்றவியல் நீதிமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறிய குடியியல் நீதிமன்ற அதிகாரங்களைச் செயற்படுத்துகிறது. ஆரம்ப நீதிமன்றம் தொடர்பாக கீழ்க்காணும் விடயங்கள் முக்கியமானவையாகும்.

ஆரம்ப நீதிமன்றத்தினால் கீழ்க்காணும் தேவைகளின் கீழான வழக்குகளை மாத்திரம் விசாரிக்கமுடியும்.

1.நஷ்டக் கோரிக்கைகளுக்கு உரிமை கோருவதற்கு அல்லது பணம் செலுத்தத் தவறியமை - இது 1500ரூபாவுக்கு குறைவாய் இருக்கும் பொழுது.

2. உள்ளூராட்சி நிறுவனங்களின் துணைச் சட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் அவற்றின் வருமானங்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான விடயங்கள்.

3.காணிப் பிணக்குகள் தொடர்பான குற்றங்கள் அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிகை தொடர்பான முழுவதும்ஒத்த ஆரம்ப குற்றவியல் நீதிமன்ற அதிகாரம் ஆரம்ப நீதிமன்றத்தினால் செயற்படுத்தப் படுகிறது.

எடுத்துக் கொண்ட விடயம் 1500 ரூபாவுக்கு குறைவாக இருந்த போதிலும் அரசாங்க கட்டளையின் பிரகாரம் ஆற்றப் படுகின்ற செயல்களுக்கு எதிராக அல்லது நீதிமன்ற ஒழுங்கமைப்பு சட்டத்தின் 4ஆம் அட்டவணையின் கீழ் எடுக்கப்படும் ஏதாவது காரணம் தொடர்பாக ஆரம்ப நீதிமன்றத்திற்கு விசாரணை நடாத்த முடியாது.

*முக்கியமானது*

தீவின் பல நீதிமன்ற வலயங்களில் ஆரம்ப நீதிமன்றங்கள் செயற்படுத்தப்படாததுடன் அந்த அதிகாரங்கள் நீதிவான் நீதிமன்றங்களினால் செயற்படுத்தப்படுகின்றன. ஆரம்ப நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட வேண்டிய வழக்குகள்அன்றைய வழக்கத்தின் படி அறுபத்தாறின் வழக்குகள் என அழைக்கப்படும்.

இப்பொழுது எங்கள் பிணக்குகளை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நீதி மன்ற மற்ற மாற்று உபாய முறைகள் பல வற்றை எடுத்து சீர்தூக்கி பார்ப்போம்.

### 7.தொழில் நியாய சபை (Labour Tribunl)

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் முன்னுரிமைச் சாதகமாக இருப்பது தொழில் சார்ந்த சமாதானம் அதாவது தொழில் தருனர், தொழில் பெறுபவர் ஆகிய இரு தரப்பினர்களுக்கிடையில் நிலவும் விளக்கம் மற்றும்நம்பிக்கையின் மீது அடிப்படையாகக் கொண்டஒத்தழைப்பேயாகும். இது முறையாகச் செயற்படாதவிடத்து வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் ஊடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுவான தாக்கத்தை உண்டு பண்ணுவதுடன் புதிய முதலீட்டாளர்களுக்கும் ஊக்குமளிக்கப்படுவதில்லை.

ஆனால் சம்பிரதாய நீதிமன்றங்களினால் தொழில் பிணக்குகளுக்கு தீர்ப்பளிக்கும் பொழுது கீழ்க்காணும் பிரச்சினைகள் தோன்றுகிறதென ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருந்த காலத்திலேயே இருந்து இந் நாட்டு சட்டத்தை தயாரிப்பவர் களினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

1.தொழில்பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கு எடுக்கும் காலம் அதிகமாகும் பொழுது நேரடியாக அது நாட்டின் பொருளாதாரத்திற்கு தாக்கத்தை உண்டு பண்ணுகிறது.

2. தொகுதிவாரியான நீதி மன்ற நடைமுறைகள்காரணமாக சாதாரண தொழிலாளர்கள்தொல்லைகளுக்கு உட்படுகிறார்கள்.

3.சம்பிரதாய பூர்வ நீதிமன்றங்கள் சட்டம் சார்ந்த அடிப்படையின் மீது கட்டுப்பட்டு நடப்பதினால் சேவையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கன்றி சட்டம் சார்ந்த ஏற்பாடுகள் மாத்திரம் சீர்தூக்கிப் பார்த்து வழக்குகளின் தீர்ப்புகள் வழங்கப்படும் பொழுது நியாயமற்றவைகளுக்கு உட்படும் தொழிலாளர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுதல்.

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக பாராளுமன்றத்தினால் 1950ஆம் ஆண்டு 43ஆம் இலக்க கைத் தொழில் பிணக்குச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டம் 1957ஆம் ஆண்டு62ஆம் இலக்கம் கொண்ட திருத்தப்பட்ட சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டதுடன் தொழில் நியாய சபை எனும் தொழில் நியாய சபை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. தொழில் தருனர், தொழில் பெறுனர் ஆகிய இரு தரப்பினரிடமிருந்து பெறும் முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்து நியாயமானதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதெனக் கருதும் கட்டளையை வழங்குவதை தொழில் நியாய சபையிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது.

சட்டத்தின் பிரகாரம்தொழில் நியாய சபையிடம் இருந்து நிவாரணம் அல் லது உதவி (Relief or Redress ) யை கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்துக் கொள்ள முடியும்.

i)தொழில் தருனரினால் (எசமான்) தொழில்பெறுபவரின் சேவையை முடிவுக்கு கொண்டு வருதல்.

ii)தொழில்பெறுபவர்கள் 15பேர்களுக்கு குறைவாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒரு இடத்தில் உள்ள தொழில் பெறுபவருடைய சேவையை ஒரு முடிவுக்கு கொண்டு வரும் பொழுது அவர் ஒரு பணிக்கொடைக்கு உரித்துடையவராதல் வேண்டுமென சீர் தூக்கிப் பார்த்தல்.

iii) 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடை சட்டத்தின்பிரகாரம் பணிக்கொடை பணத்திற்கு உரிமையற்றவராக ஆக்கியுள்ள சந்தர்ப்பத்தில் அச்செயல் சட்ட பூர்வமானதா என சீர்தூக்கிப் பார்த்தல்.

iv) தொழில் அமைச்சரினால் சேவை நிபந்தனைகள் தொடர்பாக தொழில் நியாய சபையின் விடயங்களின் வரையறைகளை பரவலாக்கி கட்டளையிடப்படக் கூடிய வேறு விடயங்கள்.

**வழக்குரைஞர் சாறுக்க சமரசேகர**

மேற்குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களில் சட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள விதத்தில் விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து சேவையை முடிவுக்குக் கொண்டு வரும் நாளில் இருந்து 6 மாதங்களுக்குள் தொழில் நியாய சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும் தொழில் பெறுபவர் சார்பாக தொழிற் சங்கத்திற்கும் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். சட்டத்தின் 15 ஆம் விதிகள் தொடரின் பிரகாரம் இது இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும். (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - மாதிரி வினாத்தாள் -ஆங்கிலம் பயிற்சி-02

**Time:- 03 Hours**

1) Match the following statements with the suitable games.
   1. The batsman hit the ball and runs for score. ____________
   2. In this game players try to kick the ball between the goal posts of the opposite team to score a point. ____________
   3. The players especially girls try to shoot the ball through the high net hanging from a ring on a post. ____________
   4. In this game players use a curved stick to hit the ball. ____________
   5. In this game players use rackets to hit a ball backwards and forward across a net ____________

   a) hockey b) tennis c) cricket d) football e) netball

2) This is a conversation between a mother and father about their son. Arrange it in the sequential order. The first one is done for you.
   1. Oh, no! He doesn't know how to ride. .............
   2. I'll give him lessons in the park. I'll teach him how to balance and steer. ............
   3. I think he would like a bicycle, Joy. ............
   4. But what about the traffic? He has to share the road with buses and trucks. .................
   5. We won't allow him in the traffic until he knows all the rules of the road. ..............
   6. What shall we give Tony on his birthday? ......1..........

   (5marks)

3) Read about the Evans family and fill in the forms.

   Paul Evans is a maths teacher. He is 39. He is at school now. His address is 34, King street, Bristol. His wife, Penny, is at work in her office. She is a bank manager. Her phone number at work is 8309771. They have two children, Mark and Jane.Mark is ten and Jane is seven. They are at school.
   1. Name of family head : .............................................
   2. Address : .............................................
   3. Age : .............................................
   4. Occupation : .............................................
   5. Wife's name : .............................................
   6. Occupation : .............................................
   7. Names of their children : i) .............................................
      ii) .............................................
   8. Their ages : i) .............................................
      ii) .............................................

   ( ½ x10 =5 marks)

4) You find in the "Pen pals" column the following: "Clara Robert, 16, interested in swimming, reading crime stories and traveling wants a pen friend from Asian countries especially Sri lanka."
   Write a letter to her expressing your wish to be her pen pal. In your letter include your name, age, interest and why you want to have her as your pen friend.

   (5marks)

5) Read the following passage about David.

   David is an architect. He gets up at 7.30a.m and has a shower. He leaves home at 8.30a.m and goes to work by train. He arrives at the office at 9.00a.m. David returns home at 6p.m. He eats his dinner at 7p.m and goes to bed at 10.30p.m

   Now write about Rosa using the details about her.

   | | |
   |---|---|
   | Name: | Rosa |
   | Occupation: | doctor |
   | Get up: | 9.30 |
   | Leave home: | 12.00 |
   | Mode of traveling: | bus |
   | Working place: | hospital |
   | Arrives at: | 12.15 |
   | Returns home: | 10.00p.m |
   | Have dinner: | 10.30p.m |
   | Go to bed: | 11.00p.m |

   (5 marks)

6) Underline the correct word from those given in the brackets.
   Have you ever seen (the, a , an ) monkey with two tails? I saw (one , all , any ) such monkey in a circus. It used its longer tail to balance itself on a rope. While walking quickly on ( a, an, the) rope it started wagging the other one. This was great fun to (the, any, much) little children who were there. I do not know whether (each, that, any) monkey played a trick on all of us.

7) Read the letter and answer the questions given below.

   Central College,
   Anuradhapura.
   Nov- 14th – 2008

   My dear father,

   Our class teacher proposes to take us to Sigiria on 25th November 2008 by bus. We shall be starting early in the morning. On the way we expect to visit the Rock Temble at Dumbulla too. A friend of our teacher at Sigiria will have our lunch ready for us. We shall be back the same evening before six. Nearly all my classmates are going. Therefore kindly give me permission to join them on this trip. I will take good care of myself. If you agree, please send me Rs.150/= for bus fare and other expenses.

   Thank you.

   Give my love to mother and sister.

   Your loving son,
   Ramesh.

   1) Who is the sender of this letter?..................................
   2) With who does Ramesh plan to go on this trip?..................................
   3) Where will they have lunch that day? ..................................
   4) What is the duration of the trip..................................
   5) What does Ramesh want from his father? ..................................

   (5marks)

8) You are the secretary of English Literary Association of your school. You are going to have a drama festival in the main hall of your school. Write a notice to be displayed on the notice board . In your notice include venue, time, date, chief guest names of dramas etc. ( 5 marks)

### Part II

9) Put the words or group of words in the right order and complete each of the following sentences.
   1) That is ..................................................................
      ( knocked/ me/ bicycle/ the/which/ down )
   2) I wish ..................................................................
      ( more/ time /I / the English paper/ had/ answer/ to)
   3) When you ..................................................................
      ( off/ enter/ a temple/ you should/ your shoes/ take )
   4) The burglar ..................................................................
      ( other/ stolen/ and/ all/ the money/ valuable/ had )
   5) These are ..................................................................
      ( from/ imported/ dates/ which/ are/ Iran )

   ( 5 marks)

10) Fill in the blanks with the correct form of word.
   1) The girls were given clear instructions to arrange their classrooms in an ..................... manner ( order )
   2) The arms giving is held ......................................... on the 14th of March. (annual)
   3) The Srilanka transport board had organized a contest for ......................... drivers. (care).
   4) The spitting cobra of Singapore is a very .......................... reptile, as it can spit venom over a distant of several meters. ( danger)
   5) The manager gave a ....................... hearing to the complaints of the labourers. (patience)

   (5marks)

11) Fill in the blanks with one of the following.
   Until, but, as, when, although, while, if
   Noel wanted to buy a bicycle ......... He didn't have enough money, to buy a new one. A friend of his offered to sell him his bicycle for Rs 2000 ....... Noel saw the bicycle, he took a liking to it. Noel offered Rs 1500 ........... his friend refused and said he could have it for Rs 1800 .........he liked. Noel decided to buy it for Rs 1800 ....... he felt that the prize was a little too high.

12) Read this description of Volley ball matches played over the weekend. Then fill un the table below.

   **Volley Ball**

   There will be several Volley ball matches ayed over the weekend. The Navy will meet the Army on 12th Saturday at the Bogambara Ground in Kandy. Two matches scheduled to be played in Colombo. Air force Vs Colombo United at Galle face on 12th Saturday. Kandy will play against police at the police park on 13th Sunday.

   | Team | Date | Venue |
   |---|---|---|
   | Navy Vs Army | | Bogambara Ground Kandy |
   | Air forces Vs Colombo United | 12th Saturday | |
   | | | |

   (5marks)

13) Fill in the blanks correctly so as to get the meaning given in brackets.
   1) The meeting was put ...........................( the meeting was postponed )
   2) The foolish man ran ........... his money ( the foolish man wasted his money)
   3) The meeting broke ........................... late in the night ( the meeting ended late in the night)
   4) The car ran ........................... of petrol ( the car had no petrol)
   5) He wanted to put ........... at my house for two days ( he wanted to stay at my house for two days)

   (5marks)

14) There is an Educational film show about conservation of energy, screened daily between 10.00a.m and 12.00 noon. You want to reserve seats for you and two of your friends. Write a letter to the manager of the theatre asking him to reserve three seats and how much you have to pay .Include the date when you want to watch the film.

15) Read the following text and answer the questions below.

   Myanmar is a blend of many races and religions. The numerous pagodas with mona steries attached are the religious centres, and frequently the social and commercial centers of daily life as well.It is customary for young boys to enter the monastery as a novice for a period of time. The saffron robed monk with his alms bowl is a common sight in all parts of Myanmar.

   In many ways Myanmar has remained untouched by western influence. Herein lies its charm. Eighty percent of the people still live in small rural hamlets where life goes on as it has been for centuries. Their lives are dominated by the ploughing, sowing, and harves ting cycle of rice cultivation. The village with its clusters of thatched houses built on Bamboo pole, its clay water pots by the road side for the weary traveler, shows the stress free tranquil life of rural Myanmar, Both men and women have retained their traditional dress. The men wear a sarong called the "Longyi," usually in a dark colour collarless shirt, and a short jacket over it. Women wear colourful longyis with a blouse and a shawl for formal occasions. They also wear elaborate ornaments or flowers in the hair.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்-2009

**ஜனாதிபதியும் நிதி, திட்டமிடல் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்**

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நாம் இப்பொழுது முக்கியமானதொரு கட்டத்தை அடைந்துள்ளோம். கிழக்கை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து பின்பு இப்பொழுது வன்னியையும் வடக்கையும் மீட்கின்ற இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். ''கிழக்கின் உதயம்'' நனவாகி வருகின்ற வேளையில் ''வடக்கின் வசந்தம்'' பற்றிய நம்பிக்கையும் கொண்டிருக்கின்றோம்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் வடக்கிலும் ஜனநாயகத்தைப் பலப்படுத்தவேண்டும் அவ்வாறே அரசியல் தீர்வு குறித்த இணக்கப்பாடு முதலில் ஏற்படுத்திக்கொள்கின்ற அதேவேளை வடக்கில் நடைமுறைக்கு இடப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டியுள்ளது. பல தசாப்தங்களுக்குப் பின்னர் வடக்கையும் தெற்கையும் இணைக்கின்ற அபிவிருத்தி வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஒன்று தோன்றியுள்ளது.

மறுபக்கத்தில் புதியதோர் இலங்கைக்கான மஹிந்த சிந்தனை .முக்கிய அபிவிருத்தி கருத் திட்டங்கள் யாவும் பல்வேறு பட்ட கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எண்ணெய்வள ஆய்வு வேலைகளும் தொடங்கி விட்டன. தனியார் துறையினர் பரந்த அடிப்படையில் முதலீட்டையும் உற்பத்தி வினையும் மேற்கொள்வதை இயலச் செய்யும் விதத்தில் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது . விளைவுப் பெருக்கம் மிக்கதாகவும் மக்கள் சினேகபூர்வ தன்மையினைக் கொண்டதாகவும் அரச சேவையினை மாற்றும்பொருட்டு அதன் குறைபாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வாழ்க்கைச்செலவினை குறைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதனிடையே உலகப் பொருளாதாரத்தில் சடுதியாக ஏற்பட்ட வீழ்ச்சி எமது பொருளாதாரத்திலும் புதிய சவால்களை தோற்றுவித்துள்ளது. இவற்றுக்கும் முகமை செய்தவாறு நாம் இப்பொருளாதாரத்தை வழிநடத்த வேண்டியவர்களாக உள்ளோம். இவ் அனைத்து அம்சங்களையும் கருத்திற் கொண்டே இவ் வரவு செலவுத்திட்டத்தை தயாரித்துள்ளோம்.

## நிறைவான சமூகம்- நிலையான அபிவிருத்தி

கௌரவ சபாநாயகர் அவர்களே,

''மஹிந்த சிந்தனை'' யதார்த்தமான தேசிய பொருளாதார நடைமுறை ஒன்றை முன் வைத்தது. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தும் வெளிநாட்டு முதலீடுகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றிக் கொள்வதும் இவை யாவற்றையும் எமது நாட்டிற்கு ஏற்றவாறு இசைவுபடுத்துவதும் அதன் நோக்கமாகும். எமது நாட்டில் உற்பத்தி செய்யக் கூடியவற்றை உற்பத்தி செய்ய வேண்டும் என நாம் விரும்புகின்றோம். ஆகையால் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான மும்மொழிவுகளை முதற்கண் முன் வைக்க விரும்புகின்றேன்.


✠கோதுமை மாவின் நுகர்வினை ஊக்கமிழக்கச்செய்வதற்காகவும் நெல் மற்றும் ஏனைய தானியங்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் கோதுமைத் தானியத்தின் மீதான இறக்குமதித் தீர்வையினை 6 சதவீதத்திலிருந்து 10 சத வீதத்திற்கு அதிகரிக்க முன் மொழிகின்றேன் .

✠அரிசி, மா, குரக்கன் போன்ற உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக இறக்குமதியாகும் கோதுமைமா மீது 5சதவீத செஸ்வரி ஒன்று விதிக்கப்படும்.

✠ உழுந்து , குரக்கன் , தட்டைப்பயறு , எள்ளு போன்ற உள்ளூர் வேளாண்மை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இதையொத்த இறக்குமதிகளின் மீது 15 சதவீத செஸ் வரியினை விதிக்க முன்மொழிகின்றேன்.

தற்போதைய கோதுமையின் விலைகளின் படி மாவினிலை அதிகரிப்பில் இது பாதிப்புச் செலுத்தாது. எதிர்வரும் பெரும் போகத்தின் போது நாடுமுழுவதிலும் நெல்லையும் ஏனைய தானியப் பயிர்களையும் ஆகக் கூடிய அளவு உற்பத்தி செய்வதற்கு இம் முன்மொழிவுகள் பெரும் ஊக்குவிப்பாக அமையும் என நான் நம்புகிறேன்.

✠ எமது நாட்டின் பாலிற்கான கேள்வியில் ஏறத்தாழ நூற்றுக்கு 25 சதவீதம் கொண்ட சிறியளவு மாத்திரமே உள்ளூரில் உற்பத்தியாகிறது. பால் உற்பத்தியில் தன்னிறைவுகண்டதொரு நாடாக விளங்குவதற்கு பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவில் தங்கியிருக்கின்ற துரதிஷ்டவசமான நிலையில் இருந்து நாம் வி படவேண்டும். என மஹிந்த சிந்தனையில் குறிப்பிட்டிருந்தேன்.



வடக்கு, கிழக்கு, தெற்கு, வடமேற்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் எமது பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றனர். அப் பால் உற்பத்தியாளர்களே மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு பால் மா இறக்குமதியான சிறப் புப் பண்டத் தீர்வை 5 ரூபாவில் இருந்து 15 ரூபா வரை அதிகரிக்கப் படும்.

கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதற்கும் சினைப்படுத்துவதற்கும் விஞ்ஞான அடிப்படையில் அமைந்த சிறிய மற்றும் நடுத்தர அளவு பாற் பண்ணைகளை ஏற்படுத்துவதற்கும் விலங்கு மருத்துவப்பணிகளை விஸ்தரிப்ப தற்கும் இவ்வாறு சேகரிக் கப்படும் தீர்வையில் இருந்து கிடைக்கும் பணம் ஈடுபடுத்தப்படும். பாற்பண்ணையாளர்களுக்கு திரவப்பலுக்கான உயர் விலை ஒன்றை பெற்றுக்கொள் வதற்கும் இது தூண்டுகோலாக அமையும்.

✠ பதுளை , மொனராகலை ஆகிய மாவட்டங்களில் கரும்புச்செய்கையும் சீனி உற்பத்தியும் முன்னேற்றமடைந்து வந்தது. ஹிங்குராண, கந்தளாய் சீனித்தொழிற்சாலைகள் அழிவடைவதற்கு தூண்டுதலாக விளங்கியதன் காரணமாக அவை பின்னடைவுற்றன. உள்ளூர் கரும்புச்செய்கையில், சீனிக் கைத்தொழிலையும் ஊக்குவிப்பதற்காக இறக்குமதியாகும் சீனி மீதான சிறப்புப்பண்டத்தீர்வை 14 ரூபாவில் இருந்து 16 ரூபாவரை அதிகரிக்கப் படும். வடக்கின் பனங்கட்டி , தெற்கில் கித்துள் கருப்பட்டி கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கும் இது ஊக்குவிப்பாக அமையும்.

✠ உள்ளூர் தேயிலை, இறப்பர் உற்பத்திகளை உச்ச அளவில் ஊக்குவிக்கும் முகமாக இறக்கு மதியாகும் தேயிலையின் மீது கிலோக் கிராம் ஒன்றுக்கு 4 ரூபா கொண்ட செஸ் வரியையும் இறக்குமதியாகும் இறப்பர் மீது கிலோ கிராம் ஒன்றுக்கு 25 ரூபா கொண்ட செஸ்வரியையும் விதிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

✠ விலங்குத்தீனி உற்பத்திக்கு முதலீட்டுச்சபையில் தம்மை பதிவு செய்துகொண்டுள்ள கம்பனிகளுக்கு தீர்வைச்சலுகைகள் கிட்டுவதன் காரணமாக உள் நாட்டு விலங்குத் தீனி உற்பத்தியாளர்களுக்கு அநீதி ஒன்று இழைக்கப்படுகிறது. ஆகையால் சோளம் மற்றும் விலங்குத்தீனியின் மீதான இறக்குமதிகளுக்கு இ.மு.ச. உள்ளிட்ட சகல இறக்குமதியாளர்களுக்கும் தீர் வைக்குப்பதிலாக நூற்றுக்கு 25. சதவீத செஸ்வரியை விதிப்பதற்கு முன் மொழிகிறேன். எதிர்வரும் பெரும்போகத்தில் கிட்டத்தட்ட 70 ஆயிரம் ஹெக்ரேயரில் சோளம் பயிரிடுவதற்கு இந்நாட்களில் தயாராகும் கமக்காரர்களுக்கு இது பாரிய ஊக்குவிப்பாக இருக்கும்.

✠ புதிய தாராளமயக் கொள்கைகள் காரணமாக எம்பிலிப்பிட்டிய, வாழைச்சேனை ஆகிய இடங்களில் உள்ள கடதாசித் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. நாம் இவ்விரு தொழிற்சாலைகளையும் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். இவ் விரு தொழிற்சாலைகளையும் நவீனமயமாக்குவதற்கும் அவற்றை வர்த்தக ரீதியாக நீடித்து நிலைத்து நிற்க செய்வதற்கும் கடதாசி இறக்குமதிகள் மீது 5 சதவீத செஸ்வரியை விதிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன்.

✠ மொறட்டுவ அடங்கலாக நாட்டின் பல பகுதிகளில் தளபாட தயாரிப்பு துரித கதியில் முன்னேற்றம் கண்டுள்ளது. உள் நாட்டு உற்பத்தியாளர்கள் தரத்தில் உயர்ந்த வீட்டுத் தள பாடங்களையும் அலுவலக தளபாடங்களை யும் ஏற்றுமதி செய்கின்றனர். அதனை மேலும் ஊக்குவிப்பதற்காக இறக்குமதியாகும் வீட்டுத் தள பாடங்கள் , அலுவலக தளபாடங்கள் மீது 15 சதவீத செஸ்வரியை விதிப்பதற்கு நான் முன் மொழிகிறேன்.

✠ பாதணிகள், கைப் பைகள், இடுப்பு பட்டிகள் மற்று முண் டான தோற்பொருள்களின் உற் பத்தியை ஊக்கு விப்பதற்காக அவ்வாறான பொருள் களின் இறக்கு மதி கள் மீதும்கிலோ கிராம் ஒன்றுக்கு 200 ரூபாய் கொண்ட செஸ் வரியை விதிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன்.

அவ்வாறான உற்பத்திகளுக்கு அவசியமான சகல மூலப் பொருட்களுக்கும் இறக்குமதித் தீர்வை வரியிலிருந்தும் சகல பெறுமதி சேர்வரியிலிருந்தும் நான் விலக்களிக்கின்றேன். ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்து செல்லும் வகையில் தோற்பொருள் கைத்தொழிலையும் மேம்படுத்து வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

✠ சுற்றாடல் பேணுகையின் பொருட்டு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை ஊக்கமிழக்கச் செய்வதற்காக ,அவ்வாறான பொருட்களின் மீதான செஸ் வரி, 1 சத வீத்திலிருந்து 5 சத வீதத்திற்கு அதிகரிக்கப்படும்.

✠ ஆயுள்வேத மருந்து வகைகளை முன்னேற்று வதற்காக மூலிகைக் கிராமங்கள் (ஔசு கம்மான) கருத்திட்டத்தை விஸ்தரிப்பதற்கான வேலைத்திட்டம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரக்கூடியதாக அமையும் எமது சுதேச மருத்துவக் கைத்தொழில் ஆயுள் வேத மருந்து இறக்குமதிகள் மீதான தீர்வையை அதிகரிப் பதற்கு நான் முன்மொழிகிறேன்.

✠பழம் மற்றும்மரக்கறி வகைகளின் இறக்குமதி காரணமாக உள் நாட்டு கமத் தொழிலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகையால் இறக்குமதியாகும் பழம் மற்றும் மரக்கறி வகைகள் மீதான செஸ்வரியை அதிகரிப்பதற்கு முன் மொழிகின்றேன்.

✠நாடு பூராகவு முள்ள கைத்தறி நெச வுக் கைத்தொழில் வேறு ஆடை உற்பத்திகளை தரத்தில் உயர்த்த உற்பத்திகளாக மாற்றுவதற்காக உள்நாட்டு பாவனைக்காக இறக்கு மதியாகும். சேலைகள் ,சாரங்கள்,தைத்த ஆடைகள், புடவைகளுக்காக தற்போதுள்ள செஸ் வரியை நூற்றுக்கு 50 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு நான்முன் மொழிகின்றேன்.

✠ குளிரூட்டிகள்,மின்விசிறிகள் மற்றும் பீங்கான் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு எமது நாட்டு உற்பத்தியாளர்கள் துணிந்துள்ளனர். ஆகையால் அவ்வாறான பொருட்களின் இறக்குமதிகள் மீதான செஸ்வரியை 50 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன்.

✠சொக்கலேற்று,விஸ்கோத்து,இனிப்புப் பண்டங்கள் போன்ற உற்பத்திகள் எமது நாட்டு உற்பத்தியாளர்களுக்கு காலா காலமாக நன்கு பரிச்சயமான தொழில் முயற்சிகளாகும். அவ் வாறான பொருள்களின் உற்பத்தியை மேலும் ஊக்குவிப்பதற்காக அத்தகைய இறக்குமதி கள் மீதான செஸ்வரியை 50சதவீதத்தால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.அவ்வாறான பண்டங்கள் மெலமைன் அற்ற பாவனைக்கு உகந்தவையென சர்வதேசதர நிர்ணயத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியுள் ளது.

✠ எமது அரசாங்கம் உள்ளூர் உந்து ஊர்திகளின் உறபதத்யை ஊககுவிததது. அவ் ஊர்திகள் தற்போது சாதாரணமாகக் காணக் கிடைக்கின்றன. அவற்றுக்குப் பதிலாக உந்து ஈருளிகளின் உற்பத்தியும் ஊக்கு விக்கப்பட வேண்டும். அவ்வாறன கைத் தொழில்களுக்கான ஊக்குவிப்பைத் தொடர்ந் தும் மேற்கொள்வதற்கு நான் முன்மொழி கின்றேன்.

✠கைவினைத் தொழிலின் முன்னேற்றத்திக்கு அவசியமானநிதிகளையும் பண்டங்களின் தரநிர்ணயங்களை உயர்த்துவதற்கு அவசியமான தொழிநுட்ப அறிவையும் வழங்க நடவடிக்கைகள் தேசிய கைப்பணிச் சபையூடாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால் அது தொடர்பானசகல பதிலீட்டு இறக்குமதிகள் மீதும் விதிக்கப்பட்ட செஸ் வரியை 100 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். உள்நாட்டு உற்பத்தியாளர்களின் செலவினத்தைக் குறைப்பதற்காக இறக்குமதியாகும் பித்தளை , வெள்ளி போன்ற மூலப் பொருட்களுக்கு பெறுமதி சேர் வரியிலிருந்தும் சுங்கத் தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

✠ எமது நுகர்வுத்தேவையின் நூற் றுக்கு 50சதவீதமான உப்பு, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்புடுவது மிகவும்வெட்கப் பட வேண்டிய விடயமெனநான் நம்புகிறேன். எனவே உப்பு உற்பத்தியில் சுயதேவையை பூர்த்தி செய்வதற்கு மாத்திர மன்றி, ஏற்றுமதிக் கைத்தொழிலொன்றாக முன்னேற்றுவதற்கும் வெளிநாட்டிலிருந்தும் இறக்குமதியாகும். உப்புக்காக கிலோ கிராம் ஒன்றுக்கு 10ரூபா கொண்ட செஸ்வரியொன்றை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

உள்ளூர் உற்பத்திகளுக்காக முன் வைக்கப்பட்ட மேற்கூறிய முன் மொழிவுகள் காரணமாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன் படுத்திதரத்தில் உயர்ந்த பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடியதாகஇருக்கும் அதன் மூலம் பிரதேசரீதியான உற்பத்திப் பொருளாதாரம் விரிவாக்கமடையும். உள்நாட்டு வர்த்தக சமூகமொன்றும் அதன்மூலம் தோற்றம் பெற்று நிலைத் திருக்கக் கூடிய அபிவிருத்தியை எய்தக் கூடியதாகவும் இருக்கும்.

✠ உலக பொருளாதார நெருக்கடியின் முன்னிலையில் நாம் ஆற்ற வேண்டிய முக்கிய பணி எமது தேவைகளுக்காக உள் நாட்டு உற்பத்திகளை விரிவாக்கம் செய்வதாகும் எமக்கு அவசியமான அரிசியை நாமே உற்பத்தி செய்து கொண் டதன் காரணத் தால் அண்மையில் உலகம் பூராகவும் விரிவடைந்த உணவு நெருக்கடியில் இருந்து நாம் மீளக் கூடியதாக இருந்தது.

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கான பால் மானியம்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைச் செலவைக்குறைப்பதற்கும் அத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு உள் நாட்டுத் திரவப் பால் வழங்குதற்கும் சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் தோட்டப்புற குடும்பங்களின் 1-5 வயதிற்கிடைப்பட்ட குழந்தைகளுக்காக 200 ரூபா கொண்டமாதாந்தப் படியொன்றை 2009 ஜனவரி மாதம் தொடக்கம் வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன். உரிமை பெறும் சகல குடும்பங்களுக்கும் முத்திரை விநியோகிப்பதற்கும் மகளிர், சிறுவர் அமைச்சும் சமூர்த்தி ஆணையாளர் திணைக்களமும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இதன் மூலம் திரவப் பால் உற்பத்தியும் ஊக்குவிக்கப்படும். இதற்காக 900 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கு முன் மொழிகிறேன்.

(தொடரும்)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

வாருங்கள் எம் இனிய உறவுகளே!

அவசரப்படாமல் அழைப்பொன்று வந்திருக்கிறது ! ஆனால் இம்முறை அழைப்பு அறிவிப்பாகியிருக்கிறது. ஆர்ப்பரித்து எழுந்து பேரலை முழக்கமாகியிருக்கின்றது.

பட்டினியாம் , பஞ்சமாம், இன்னும் இருக்குதாம், இனியும்- வரப்போகின்றதாம்.

அங்குலமொன்று நகர ஐநூறு பேரை அகதிகளாக்கிவிடும் பட்டினியல்ல இது. பசியென்று புசிக்க உணவேதுமில்லாமல் உடல் ஒட்டி ஓடி ஒடுங்கி உணர்விழந்து போகும் பட்டினி இது. மனித வாழ்வில் நடைறும் அவலச் சாவுக்கு காரணமான பசியினால் வந்த பட்டினி இது.

பட்டினிக்கு அடித்தளம் போர் என்றாலும் கடந்த தசாப்தத்தை கலக்கியெடுத்த பஞ்சங்களுக்கு குறைவேதுமில்லை. பஞ்சம் பட்டினிச் சாவாகி இறுதியில் அவலச் சாவாகியுள்ளது. விஞ்ஞானம் செட்டை கட்டிப் பறக்க எப்போதோ கனவு கண்டு சாதித்துவிட்டது. சந்திரனுக்கென ஆரம்பித்து செவ்வாயில் அகலக்கால் பதித்து இப்போது சூரியனை நோக்கிப் பறக்க ஆரம்பித்துவிட்டது. ஆனால் பட்டினியை தவிர்க்கவோ இல்லாதொழிக்கவோ விஞ்ஞானத்தினால் முடியவில்லையே!

சென்ற நூற்றாண்டில் உணவுப் பஞ்சத்திற்கு தீர்வாக முன்மொழியப்பட்ட "பசுமைப் புரட்சியை" தூசி தட்டி மீண்டும் ஒரு தடவை கையில் எடுக்கவேண்டிய தேவை வந்துவிட்டது. 1960 களில் உலக மக்கள் அனைவரும் சேர்ந்து செய்த பசுமைப் புரட்சியினால் அநுகூலங்களும் எதிர்விளைவுகளுமாக காலம் ஓடி முடிவுறும் செய்தி ஆறுவதற்குள் இனியொரு "பசுமைப்புரட்சி" என அறைகூவல் வந்திருக்கின்றது.

உலக சனத்தொகை வகை தொகையின்றி பெருகிக் கொண்டு போவதும் விலைவாசி உயர்ந்துகொண்டு போவதும் தான் இடிமுழங்கி ஓய்ந்த அறைவுகூவலுக்கு காரணம் எனலாம்.

### அறைகூவலும் அனுகூலங்களும்

அறைகூவல் செய்து அமைந்திருப்பதும் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள உலக நெல் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகளும் ரோமில் உள்ள உலக உணவு நிறுவத்தின் விஞ்ஞானிகளும் தான். இதற்கிடையில் இவ்வளவு பரப்பிற்குள்ளும் இன்னொரு பக்கத்தில் எங்களூரிலிருந்தும் என் தச்சந்தோப்பு கிழவியும் குசலம் விசாரித்திருக்கிறார்.

விஞ்ஞானிகளின் அறைகூவலுக்கு மறுத்தான் கொடுத்ததுபோல கிழவியின் குசலம் விசாரிப்பு அமைந்திருக்கின்றது. என்னவாம் உங்கடை விஞ்ஞானமும் விவசாயமும்? வீம்பிற்காக கேட்ட கேள்வி மாதிரி இருந்தாலும் அங்கிருந்து கேட்டதில் உறைந்ததால் அடுத்த நிமிடம் அருகிலிருந்தேன்.கிழவியின் கேள்வியில் அர்த்தமிருக்கின்றது.




இங்கே அங்குமிங்குமாகவுள்ள குடில்களுக்குள்ளிருந்து பிலிப்பைன்ஸ் விஞ்ஞானியுடன் "பசுமைப்புரட்சி" பற்றி அளவளாவ ஒரேயொரு செக்கன் மட்டுமே தேவைப்பட்டது. ஈமெயில் 'ஈ' யை மிஞ்சிய வேகத்தில்...விஞ்ஞானத்தில் தொடர்பாடலுக்காக அப்படியொரு அதீத வளர்ச்சி. அதுவும் அடிபட்டு, இடம்பெயர்ந்து, நெருக்குவாரப்பட்டு சிறு சிறு காளான் குடில்களமைத்து அக் கூடாரங்களுக்குள் இருந்து இத்தனையும் நடக்கின்றது. என்ன! மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு செக்கனில் உலகைத் தொட்டு வர முடிகின்றது.

ஆனால் எங்களூர் கிழவியை குசலம் விசாரிக்க மூன்று மணித்தியாலங்கள் முழுதாய் வேண்டும். பலாலிப் பாதையும் வல்லைப் பாலமும் சொல்லாமல் கொள்ளாமல் அவ்வப்போது மூடிக்கொள்ளும். ஆங்காங்கே நிறுத்து! எங்கே? எங்கிருந்து? போன்ற கேள்விகளைக் கேட்டு மதிக்கும் குறுக்குப் பாதைகள். இத்தனை தடைகளையும் தாண்டி மெல்ல எங்களூர் செல்ல மனம் களைத்துவிடும். இன்னொரு முறை இப்படி வேண்டவே வேண்டாம்.

பிலிப்பைன்ஸ் விஞ்ஞானி கூறியதை என் தச்சந்தோப்பு கிழவியிடம் சொன்னேன். இம்முறை கண்ணால் கேள்வி கேட்டார் என்னவாம்? "இன்னொரு பசுமைப் புரட்சி" என்றேன்.

வைரசுக் காய்ச்சலை ஊர் சுற்றி தேடி வைத்துக்கொண்டு சுருண்டு படுத்திருந்த கிழவி தலைமயிரை சுருட்டிக்கட்டிக் கொண்டு எழுந்து இருந்தார். கூட இருந்த கிழவனுக்கு ஆச்சரியம்! மெல்லமாக என்னைக் கேட்டார்.

என்ன தம்பி சொன்னீர்? தண்ணி கூடக் குடிக்காமல் மூன்று நாளாய் சுருண்டு மடித்துக்கொண்டு கிடந்தவள் ஏதோ உசார் வந்ததுபோல எழும்பியிருக்கின்றாள் என்றார். கேட்கவில்லை போலும், சொன்னதைச் சொன்னேன்.

ஆ? என்று இழுத்தார். "இன்னொரு பசுமைப் புரட்சியாம்" என்றேன் சற்று உரப்பாக. கிழவன் கிழவியை ஓரக்கண்ணால் பார்த்து ஓர் நமட்டுச் சிரிப்பு சிரித்தார். திரும்பி என்னைப் பார்த்தார். "உவளுக்கு எங்கை விளங்கப் போகுது?" என்றார். கடைசியாய் சொன்னது மட்டும் கிழவிக்கு கேட்டுவிட்டது போல் எங்களுக்கு கேட்கக் கூடியதாகவே முணுமுணுத்தாள்.ம்! தொடங்கிவிட்டினம் "அப்பனும் பிள்ளையும்" என்றார்.

உண்மைதான். "அப்பனும் பிள்ளையும்" விவசாயம் படித்தது விஞ்ஞானத்தை கையிலிழுத்து கதைகள் பல சொன்னாலும் எங்களூர் கிழவி, என் அம்மா! இன்றும் மொட்டைக் கறுப்பனும் .மொறுங்கனும் விதைத்து அறுவடை செய்கின்றார். காலங்காலமாக இயற்கை சுகத்தை அனுபவித்து சேதன விவசாயத்தையே செய்து வருபவர்.

எங்களூர் நெல்லின் சுவைக்கு நிகரேது? அவித்து அளவாகக் கையினால் குற்றினால் அந்த குத்தரிசியின் மதிப்பும் சுவையும் எந்த இன நெல்லினாலும் ஈடுகொடுக்க முடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் உள்ளூர் இனங்களையும் உள்வாங்கிக் கொள்வது நல்லது. "இன்னம் ஒரு பசுமைப் புரட்சிக்கு" வேலை நிறைய இருக்கின்றது. இதற்கான சரியான திட்டமிடலும் மிகவும் அவசியமானதாகும்.

உணவுப்பெருக்கம், அதிகரித்த விளைச்சல் என்றெல்லாம் கூறிக்கொண்டு, புதுப்புது இனங்களை வசதிக்கேற்ப உருவாக்கி அதன் மூலமாக அசேதன இரசாயனங்களை உள்ளீடுகளாக "மண்ணுக்குள்ளே வாரி இறைத்து எங்கள் சூழலை நாமே மாசுற வைத்த கதை இனியும் நடக்கக் கூடாது." "என்ன ! உங்கட விஞ்ஞானத்தாலை எல்லாம் மருந்தாய் கிடக்குது. எவ்வளவு நஞ்சை சாப்பிடுகிறம்" அம்மாக் கிழவி சொன்னது அனைத்தும் உண்மை. கடந்த நூற்றாண்டு "பசுமைப்புரட்சி" திட்டமிடாமல் அவசரப்பட்டு செய்த கைங்கரியம்.

விஞ்ஞானம் கைகொடுத்ததால் அளவுக்கதிகமாக பெருகிய மக்கள் தொகைக்கு பசுமைப்புரட்சி உண்ண உணவு கொடுத்தாலும் அதன் பின்னால் சுற்றியிருக்கின்ற சூழலை முடிந்தவரை தெரிந்தும் தெரியாமலும் மாசுபடுத்திவிட்டது.

இப்போது அந்த சூழலைக் காப்பாற்ற உழன்று கொண்டிருக்கின்றோம். முழு உலகமும் இனியொரு பசுமைப் புரட்சிக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. கத்தியின்றி, சத்தமன்றி. இரத்தமென்று எதுவுமின்றி இன்னொரு உணவுப் புரட்சிக்கு அழைப்பிதழ் அச்சிலேறியிருக்கின்றது.

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இனியொரு பசுமைப்புரட்சியென்று கூறிக்கொண்டு புதியன என அனைத்தையும் உள்வாங்குவதை விடுத்து, பாரம்பரிய முறைகளுக்கும் இயற்கையை செழுமைப்படுத்தும் விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து நல்லதொரு தேசத்தை கட்டியெழுப்ப அனைவரும் முன்வரவேண்டும்.

(தொடரும்)

# சுத்தமான பால் உற்பத்தி

(சென்றவாரத் தொடர்ச்சி)

### பால் கறப்பவரும் கறத்தல் முறையும்

இயந்திர துணையுடன் பால் கறப்பதைவிட கைகளினானல் பால் கறக்கும் போது கூடுதலானஆபத்தான நுண்ணுயிர்த் தொற்றுக்கள் ஏற்படுகின்றன. எனவே பால் கறப்பவரின் சுகாதாரம் மற்றும் தூய்மை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். கறப்பவர் தொற்று நோய் அற்றவராக இருத்தல் வேண்டும். பால் கறப்பவரின் கைவிரல் நகங்கள் நன்றாக வெட்டப்படிருத்தல் வேண்டும்.

அத்துடன் அவர் சுத்தமான ஆடைகள் அணிந்திருத்தல் வேண்டும். பால் கறக்கும் முன் தனது கைகளை சவர்க்காரம் இட்டு பின் சுத்தமான தண்ணீரில் கழுவி துவாயினால் உலர்த்துதல் வேண்டும்.

சிறந்த பால் கறத்தல் செயற்பாட்டின் மூலம் பாலில் தொற்றுக்கள் எற்படுவதை தவிர்க்க முடியும்.ஒழுங்கான கால இடவெளிகளில் மிக விரைவான, அத்துடன் மிருதுவான, பூரணமான, சுத்தமான ஒரு நிலையான பாலெடுத்தற் செயற்பாடானது மிக முக்கியமானதாகும். பால் கறக்கும் நேரத்தில் பசுத்தீவனம் கொடுத்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

பால் குடிக்கும் நிலையில் கன்று காணப்படுமாயின் கன்றை பாலெடுத்தலின் முன் பால் குடிக்க அனுமதிக்க வேண்டும். (Stinulus) பின்னர் மடியும் மடி முலையும் 56°C வெப்ப நிலையிலுள்ள தொற்று நீக்கி கொண்டிஸ் அல்லது குளோரின் கொண்டுள்ள நீரினால் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் ஆகக் குறைந்தது 30 வினாடிகளாவது மடியும் மடி முலைகளும் அழுத்தப்படுதல்(Massaging) வேண்டும். பின்னர் பாலெடுத்தலின் முன்மடியும் முலைகளும் நன்கு உலர்த்தப்படுதல் வேண்டும். முதற் பாலானது எடுக்கப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும். சாதாரணமான பாலிலிருந்து வித்தியாசமான பாலானாது வேறாக எடுக்கப்பட்டு அகற்றப்பட வேண்டும். முதற் பாலானது நிலத்தில் சிந்த அனுமதிக்கக்கூடாது.ஏனெனில் அது கூடுதலான அளவு தொற்றுதல்களை ஏற்படுத்தும்.

பாலானதுஒருஒடுங்கிய பாத்திரத்தினுள் மிக விரைவாக கறக்கப்பட வேண்டும் பால் கறப்பவர் கறத்தலின் போது தனது உடலையோ அல்லது பசுவின் உடலையோ கைகளினால் உரோஞ்சுதல் கூடாது. பால் கறந்ததன் பின்னர் முலைகளைத் தொற்று நீக்கியில் நனைத்தல் அல்லது தொற்று நீக்கியை முலைகளின் மீது விசுறுதல் வேண்டும். உதாரணமாக 1%அயடீன் ($I_2$) கரைசலைப் பயன்படுத்தலாம்.

### 4. ஆரோக்கியமான மந்தை

பசுக்களினுடைய நோயற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்காகப் அவற்றைப் பரீட்சித்து பார்த்தல் மிகவும் அவசியமான செயற்பாடாகும்.ஏனெனில் பசுக்களில் முக்கியமாக காணப்படுகின்ற Tuberculosis,brucellosis போன்ற நோய்கள் பாலினூடாக மனிதனிற்குக் கடத்தப்படக் கூடியவையாக உள்ளன.

அத்தோடு பசுக்களில் மடியழர்ச்சி/மடியில் ஏதேனும் காயங்கள் உள்ளனவா என பரீட்சிக்கப்படவேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பசுவினுடைய பாலானது மனித நுகர்வுக்கு ஏற்றதல்ல. அத்தோடு இதை கன்றுகள் பருகும்போது அவற்றிற்கு வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

மருந்துகள் வழங்கப்பட்ட பசுக்களிலிருந்து பெறப்படும் பால் குறிப்பிட்ட கால இடைவெளிக்கு முன் நுகர்வோரைச் சென்றடைவதை தடுக்க வேண்டும்.இவை குறிப்பாக நுண்ணுயிர்க்கொல்லிகள்மனிதனிற்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றது.

### மாட்டுத் தொழுவம்

மாட்டுத் தொழுவமானது மிகவும் சுத்தமாகவும் நீர் விரைவில் வழிந்தொடக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இதற்கு தரையானது சரியான சாய்வைகொண்டு இருத்தல் வேண்டும். இதன்மூலம் மழை நீர், மேற்பரப்பு நீர் என்பன தேக்கமடைவதனாலேற்படும் ஈக்களின் பெருக்கத்தினால் ஏற்படும் அசாதாரணமான நிலைமையைக் கட்டுப்படுத்தலாம்.

சரியாக வடிவமைக்கப்பட்ட சீமெந்தினாலான தரையானது சிறந்த வழிந்தோடலை ஏற்படுத்துகின்றது. பால் கறப்பதற்கும் கையாள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்ற கட்டடமானது கூரை கொண்டதாகவும் நல்ல காற்றோட்டம் உள்ளதாகவும் ஈக்கள், வளை தோண்டிகள், புழுக்கள் மற்றும் தூசுகள் , மழைநீர் உட்புகாதவாறும் இருத்தல் வேண்டும்.

பால் கறப்பதற்குமுன் மாட்டுத்தொழுவத்திற் காணப்படுகின்ற சகல எருக்கள் ,சாணம், தூசுக்கள் அகற்றப்பட்டுச் சுத்தம் செய்தல் வேண்டு.பால் கறத்தலின் போதும் பாலானது சூழலிற்கு வெளிக்காட்டப்பட்டிருக்கும் போதும் புகைத்தல் செய்யக்கூடாது. சரியான நீர் வழங்கலானது மாட்டுத் தொழுவத்தை மாட்டை பாத்திரங்களை சுத்தப்படுத்துவதற் அவசியமாகும்.

பன்றிகள் ,கோழிகள் போன்றவை மாட்டுத் தொழுவத்தில் அல்லது அதற்கண்மையில் வளர்க்கப்படக் கூடாது.

### சுகாதாரம்

பாலெடுக்கும் பாத்திரங்கள்,பாற் கொள் கலன்கள் மற்றும் பாலுற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் போன்றவற்றின் மேற்பரப்புகளில் காணப்படுகின்ற பக்ரீரியாக்களின் எண்ணிக்கையைக் குறைவாக பேணுவதற்கு தொற்று நீக்கி கொண்ட கரைசல் பயன்படுத்தப்படுகின்றது.

பொதுவாக அமோனியம் சேர்வைகளைக் கொண்ட தொற்று நீக்கியானது 60% TIUநீரினால் ஐதாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது.

. தகுந்த சுத்திகரிப்பும் சுகா தாரமும் அதிகளவான கிருமிகளையும் ஒட்டுண்ணிகளையும்அழுக்குடன் சேர்ந்து அகற்றிவிடுகின்றது.

**கலாநிதி செல்வி ஜெ.சின்னையா, இ.மதன்**
விலங்கு விஞ்ஞானத்துறை,
தகவல் தொடர்பு மையம்.

இதனால் எஞ்சியுள்ள மிகக் குறைந்தளவு எண்ணிக்கையான கிருமிகள் சாதாரண நிலைமைகளில் வலுக்குறைந்த தீங்குவிளைவிக்காத நிலையில் காணப்படும்.மாட்டுத்தொழுவங்களும், பராமரிப்பு இடங்களும் குறிப்பாக பால் கறக்கும் இடங்களும், பால் கறக்கும் பாத்திரங்களும் நன்றாக சுத்தம் செய்யப்படுதல் விரும்பத்தக்கதாகும்.

(தொடரும்)

Hatton National Bank

*A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability*

## அடகுப்பொருட்களை ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லிவீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.08.2007இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத , காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 15.11.2008 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

*உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்....*

- *கடனுக்குரிய வட்டிய்யையும் கடனின் ஒருபகுதியையும் (ரூ 500) செலுத்தி*

*அல்லது*

- *தற்போதைய சந்தைப்பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப்பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.*

ஏலவிற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்குண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி

(சி/1765)


(06 ஆம் தொடர்ச்சி...)

Lacquerware, wood carving, leather work, silver and gold jewellery are traditional crafts which are renowned for their exquisite workmanship.

Myanmar also has a lovely puppets' theatre and a traditional dance drama called "Zat". The Zat dramas are based on the Jataka tales and the stories of the Ramayana. The most widely celebrated occasion in Myanmar is the New Year festival which falls in April. The age old tradtion of sprinkling scented water on one's elders as a token of respect has developed into a riotous affair. Water is thrown at people in the streets, and a good time is had by all.

1) Which country is mentioned in this text?
2) Who are novice monks?
3) What is a longyi?
4) What do Zat dramas generally deal with?
5) When is new year in Myanmar?
6) What are the traditional crafts of Myanmar?
1.................... 2.................... 3....................

Find similar meaning in the passage for the followings;
1.a small village ....................
2.accepted in a society ....................

(10marks)

16) Discuss on " Are we losing family bonds today? "
How we look upon the obligation and responsibility we have of the family.
- How we treat our elders.
- How far we help each other in the family.

Importance of national festivals.
- Why we should celebrate them.
- How they help overcome the barriers of race, religion, caste,etc.
- How they build up national unity and patriotism

(15marks)

**6.112008வலம்புரியில் பிரசுரமாகிய ஆங்கிலபாட மாதிரி வினாத்தாளின் 13ஆவது வினா கீழ் தரப்படுகின்றது.**

13. Read the text. There is an incorrect word in each line underline the mistake and write the correct word in the space given. One is done for you.
A crow stole a piece of cheese.
It fly with it to a tree. ......flew..............
A fox seeing the crow ........................
It wanted the piece of cheese for myself ........................
The fox praises the crow ........................
The foolish crow opened its mouth singing ........................
The piece of cheese fall to the ground ........................
*The sly fox picked it up and ran off happily* ........................

(5 marks)

**அவ்வினாத்தாளுக்கான விடைகளும் கீழே தரப் படுகின்றது.**

## நாடாளுமன்றத்திற்கு அருகாமையில் ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது

இலங்கை நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள இராஜகிரிய, பத்தரமுல்ல ஆகிய பிரதேசங்களில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சோதனை நவடிக்கையில் ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரும் காவல்துறையினரும் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த இரு பிரதேசங்களிலும் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். கைது செய்யப்பட்ட ஐந்து தமிழ் இளைஞர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என காவல் துறையினர் மேலும் தெரிவித்தனர்.

வரவு -செலவு திட்டத்தை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ச சமர்ப்பிக்க இருந்தமையினால் நாடாளுமன்றத்துக்கு அண்மித்த பிரதேசங்கள் சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஓ

## 'அரிசி'யியல்

ஏழை வீட்டுக் கதையைக் கொஞ்சம் கேட்டுப்பாரு
ஏக்கம் மட்டும் மிஞ்சும் எங்கள் நிலமை பாரு
சுவட்டம் போட்டுத் திருங் கவலை இதுவுமில்லை
சுஹாவிட்டால் மனசு ஆற வழியுமில்லை.

நேத்து வரை நெல்லை நானும் சேர்த்து வைச்சன்
நாத்துப் பயிரா நாலு பரப்புக்குப் போட்டுவைச்சன்
நாங்கள் வாழ வானம் பார்த்து நேத்திவைச்சன்
நாலு காசு வருமேயென்று ஆசை வைச்சன்.

வருண பகவான் மனசுலயும் கருணை யில்லை
வழமையாக வாற மழை வரவு மில்லை
வரண்டு போன வயல் நிலமா எங்களுக்கு
வயிறும், மனசும் ஏங்கியேங்கி காய்ஞ்சிடுச்சு.

மரப்பெட்டிக்க வைச்சிருந்த நெல்லெடுத்து
மண்ணுக்க மறுபடியும் போட்டாச்சு
விளைஞ்சாத்தான் வரும்படியும் எங்களுக்கு
வித்தாத்தான் வாழ்க்கையென்று ஆகிப் போச்சு

இறைக்கவெண்டா எண்ணைவிலை ஏறிப்போச்சு
இறைச்சாத்தான் நெல்லென்று ஆகிப்போச்சு
அங்க இங்க அலைஞ்சு நானும் கடன கேட்டு
அஞ்சப் பத்தை சேர்த்து எண்ணை வாங்கியாச்சு

பம்பியதில் எண்ணை யெரிய வயிறெரிய
பாய்ச்சிய நீர் வாய்க்கால் வழி பயிரடைய
விஞ்சிய செலவில் மீள பயிர் வருமோ?
விதை நெல்லாவது மீண்டும் வீடு வருமோ?

*ஜெ. உமாசுதன்-வடலியடைப்பு.*

**Answers**
**Model Paper I**

**Part I**

1)
1. f
2. c
3. d
4. b
5. a
6. e

2)
a. F
b. T
c. T
d. F
e. F

3)
1. hard
2. work
3. husband
4. complains
5. to

4)
1. He was about five years old.
2. His father's gift is a compass.
3. Yes.
4. He compared it with mother's sewing needle.
5. Albert will become an engineer.

5)
1. He has gone outstation.
2. Can I contact him there?
3. That will be helpful.
4. Thank you very much.
5. You are welcome.

6) The annual exhibition of school inventors will be opened by the Minister of Education at Navalar Hall Jaffna on 1st December at 9.30 a.m. There will be more than 200 selected participants from schools all over the island.

**Part II**

1)
1. They
2. do
3. been
4. are
5. Most
6. Controlled
7. respective
8. parts

2)
1. The cock is crowing
2. It is day time
3. Cattle are grazing with their heads bent
4. The oldest, the youngest and the strongest are at work.
5. There are forty cattle.

3)
1. a
2. b
3. a
4. a
5. c

5) so, itself, praised, to sing, fell.

6)
2. here
3. good
4. do
5. some
6. has.

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையிலிருந்து சிவில் சமூக சட்டத்தரணிகள் குழு விலகல்

## குழுவின் நம்பகத்தன்மையற்ற நடவடிக்கையே காரணம்

(கொழும்பு)

பாரதூரமான மனித உரிமை மீறல்களை விசாரித்தறிவதற்கான ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணை நடவடிக்கைகளில் இருந்து சிவில் சமூகம் மற்றும் பாதிக்கப்பட்டவர் களின் சார்பில ஆஜரான சட்டத்தரணிகள் குழு நேற்று முன்தினம் விலகிக் கொண்டது.

சுயாதீன விசாரணைகளில் ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் நம்பகத்தன்மை யற்றவையாக இருக்கின்றன.

அத்துடன் பக்க சார்பான நோக்கம் தெளிவுபடுவதுடன் நவம்பர் நான்காம் திகதியுடன் நிறைவடைய வேண்டிய விசாரணை நடவடிக்கைகள் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப் பட்டமையினால் ஆணைக் குழுவின் சுயாதீனத்தில் பாரிய சந்தேகம் நிலவுவதாக தெரிவித்தே தாம் இந்த விசாரணை நடவடிக்கைகளில் இருந்து விலகிக் கொள்வதாக மேற்படி அமைப்புக்களின் சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

தாம் இந்த நடவடிக்கைககளில் இருந்து விலகிக் கொள்வதற்கான அறிவித்தலையும் அறிக்கையையும் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நிஷங்க உடலாகமவிடம் கையளித்ததாகவும் அந்த அமைப்புக்கள் தெரிவித்தன.

'அக்ஷன் கொன்ட்ராலா பெய்ம்' என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தின் பணியாளர்கள் 17பேர் கடந்த 2006ஆம் ஆண்டு மூதூரில் படுகொலை செய்யப்பட்டனர்.

அதே வருடம் முற்பகுதியில் திருகோணமலை கடற்கரை வீதியில் வைத்து பல்கலைக் கழகத்துக்கு தெரிவான ஐந்து மாணவர் களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தப் படு கொலைகளின் விசாரணை நடவடிக்கையில் மேற்படி பல்கலைக்கழக மாணவர்கள் ஐந்து பேரினது விசாரணைகள் நிறைவடைந் திருக்கின்றன. இவ்வாறு கொலை செய்யப் பட்டவர்களின் சார்பில் சட்டத்தரணி கே.எஸ். இரட்ணவேல் மற்றும் எஸ். எம். சம்சூன் ஆகியோரும் அதேவேளை சிவில் சமூகம் சார்பில் சட்டத்தரணிகளான நிமல்கா பெர்னாண்டோ சுதர்ஷன குணவர்த்தன, ரெனிட்டா ஞான ராஜ்,ஷெல்ரின் அகிலன்,பவானி பொன்சேகா வி.எஸ்.கணேசலிங்கம், பிரியங்க கமகே ஆகியோரும் இந்த விசாரணைகளில் இருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

ஆட்கடத்தல்கள் ,காணாமல் போதல்கள், விபரிக்க முடியாத மனித படுகொலைகள் போன்ற பாரதூரமான மனித உரிமை மீறல்களை விசாரித்து கண்டறிவதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கடந்த 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது.

8 உறுப்பினர்களைக்கொண்ட இவ் ஆணைக்குழுவிற்கு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நிஸங்க உடலாகம தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்த விசாரணை நடவடிக்கைகளில் திருப்தியடையாதமையாலேயே ஆணைக் குழு உறுப்பினர்களான டாக்டர் தேவநேசன் நேசையா, ஜாவிற்யூசப், கே.சி.லோகேஸ்வரன் ஆகியோர் மற்றும் மனோகரி முத் தெட்டுவேகம ஆகியோர் ஏற்கனவே விலகிக் கொண்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

தமது விலகல் குறித்து சிவில் சமூக நிறுவனங்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிவில் நிறுவனங் கள் மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடவடிக்கைகளை கடந்த 2006 செப்ரெம்பர் மாதம் முதல் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. இராணுவம் மற்றும் அதிரடிப்படையினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஊடாக சாட்சிகளுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டமை பாரதூரமான விடயம். இருப்பினும் ஆணைக்குழுவின் விசாரணைகளில் நாம் நம்பிக்கை வைத்திருந்தோம்.

கடந்த இரண்டு வருட காலத்தில் ஆணைக் குழு 16 சம்பவங்களில் ஒரு சம்பவத்தை மட்டுமே நிறைவு செய்திருக்கின்றது. இதனால் ஆணைக்குழுவின் வெளிப்படை தன்மைகளில் மற்றும் சுயாதீனம் ஆகியவற்றின் பாரதூரமான சந்தேகங்கள் எழுந்துள்ளன.

தொலைக்காட்சி சம்பாஷணை சாட்சியங்களை (வீடியோ கொன்பரன்ஸ்), ஜனாதிபதி தடுத்து நிறுத்தியமை ஆணைக் குழுவின் அடிப்படை சுதந்திரத்தைப் பாதித் திருக்கிறது. அத்துடன் கிடைக்கப்பெறவேண்டிய சாட்சியங்கள் ஆதாரங்கள் குறித்து விசாரிக்கும்வாய்ப்பு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் ஆணைக் குழுவின் உத்தியோகப்பூர்வ வழக்கறிஞர்களாக செயலாற்றுவது சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பின்மை பற்றி கேள்விகள் எழுந்துள்ளன.

**மனித உரிமை மீறல் தொடர்பில் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப் படும் பொழுது சட்டமா அதிபர் திணைக்களம் அரசாங் கத்தை பாதுகாக்கவே முயற்சிக் கின்றது.** இதில் ஜனாதிபதியின் பங்கும் இருக்கின்றது. ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவரை பதவி விலகச் செய்வதற்கு ஜனாதிபதி முறையற்ற விதத்தில் தனது செல்வாக்கினை பயன் படுத்தி அவர் விலகுவதற்கு காரணமாக இருந்தார்.

இதனைத்தொடர்ந்து மேலும் 3 உறுப்பினர்கள் இக்குழுவில் இருந்து விலகிக் கொண்டனர். இந்தப்பதவி விலகல்கள் தொடர்பில் ஆணைக்குழு எந்தவொரு விளக்கங்களையும் பகிரங்கப்படுத்தவில்லை. இவ்வாறான நிலைப்பாடுகள் ஆணைக் குழு வின் நம்பகத்தன்மையையும் சட்ட பூர்வத் தன்மையையும் கேள்விக் குறியாக் கியுள்ளன.

இறுதி நேரத்தில் ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை பகுதியளவாக நீடித்தமை அதன் சுதந்திரத்தன்மை மற்றும் வெளிப் படைத் தன்மையை பாதிக்கின்றது.

நீடிக்கப்பட்ட 6 மாதங்களில் ஆணைக் குழு முக்கியமான சாதனைகள் எதனையும் சாதிக் கப்போவதில்லை. சடுதியாக நிறுத்தப்படும் சாட்சிகளில் பாதுகாப்பு அவர்களின் கௌரவம் பற்றிய எமது அக்கறையை மீண்டும் வலியுறுத்து கிறோம் .ஆனாலும் ஆணைக்குழு அதற்கு உத்தரவாதம். அளிக்காது என்ற தீர்மானத் திற்கு வந்துள்ளோம். இவ்விசாரணைகள் நடவடிக்கைகளில் இருந்து விலகியபோதிலும் எமதுபங்கேற்பு சாட்சியங்கள் மற்றும் சமர்ப் பிக்கப்பட்ட ஆதாரங்கள் குறித்த எமது அவதானங்களை டிசம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அறிக்கையாக சமர்ப்பிப்போம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேலினால் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக் கப்பட்ட அறிக்கையில் சாட்சிகளின் பாதுகாப்பினையும் அவர்களது இருப்புக்கான உத்தரவாதங்களையும் ஊர்ஜிதப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆணைக்குழுவிற்கு இருக்கின்றது. சாட்சியங்களில் அனுமதி இல்லாமல் அவர்களை புகைப்படம் எடுப்பதும் சாட்சிக் கூண்டில் நின்று சாட்சியங்களை வழங்கிக் கொண்டிருக்கும் பொழுது சைகையால் அச்சுறுத்தி சாட்சியம் அளிக்க இடமளிக்காது செய்வதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் அல்ல சாட்சியங்கள் அத்துடன் சாட்சியாளர்கள் வி[illegible] அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் மிரட்டப்படுவது போன்ற [illegible]களால் விசாரணைகளில் உண்மைத் தன்மைகளில் பாதகம் ஏற்படுகின்றது.

மேற்படி அச்சுறுத்தல்கள் மற்றும் தலை[illegible]கள் குறித்து சாட்சியாளர்களால் ஆணைக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட் டிருக்கின்ற அதேவேளை இவ் விடயங்கள் தொடர்பில் ஆதாரபூர்வமாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனாலும் சாட்சிகளை பாதுகாப்பதிலோ அல்லது ரகசியங்களை பாதுகாத்து சுயாதீன விசாரணைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கோ ஆணைக் குழு தவறி இருக்கிறது.

இவ்வாறான நம்பகத்தன்மை அற்றுப் போனதன் காரணமாகவே ஆணைக்குழு உறுப்பினர்களும் விலகிக்கொள்ள நேர்ந்ததை ஆணைக்குழு நினைவிற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஓ-6)


# 23 ஆவது ஜனன நாளில் நெஞ்சகலா நினைவுகள்



அமரர்

சகாதேவன் நிலக்ஷன்

Journalism Awards Winner for Excellence-2007

08.11.1985

எங்கள் உயிரோடும் உணர்வோடும்
எல்லா நினைவுகளோடும்
நீக்கமறக் கலந்து
நிறைந்துள்ள எம் நிறை நிலா
உன்னுடைய தாகம்
உன் மதிப்பைத் தீர்மானிக்கிறது.
எங்களுடைய நினைவுகளோ
உன்னிடமே சங்கமமாகிறது
எம் இதய வீட்டைத் துறந்து
எம்மை விட்டு நீ சென்ற பின்
எந் நேரமும் உன் நினைவுகளுடன்
ஏங்கி வாழும் உன் உறவுகள் நாம்

எந்நேரமும் உம்மைநினைந்துருகும்
பாசமுள்ள அப்பா, அம்மா, அண்ணா

(சி/1764)


## உங்கள் வெற்றி உறுதியையும் நம்பிக்கையையும் தருகிறது

வரலாற்றைத் திருத்தி எழுதிய வெற்றிச் செய்தியை வையகம் எங்கும் பரவச் செய்தவரே, உரிமைகளுக்காகப் போராடும் மக்களுக்குப், புதிய நம்பிக்கை ஒளியைக் கொடுத் திருக்கும் சரித்திர நாயகனே உங்களுக்கு என் கோடி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் பராக் ஒபாமா அவர்களுக்கு விடுத் திருக்கும் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கும் வாழும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும், உரிமைக்காக போராடுபவர்களுக்கும் ஒளி விளக்காக நீங்கள் திகழ்கிறீர்கள். சிறுபான்மையினர், வேறு நிறத்தவர் என்று சமூக, இன ஒடுக்குமுறைகளுக்குள் புதைக்கப்பட்ட, அவமானப்படுத்தப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த வெற்றியாகவே உங்களின் வெற்றியைப் பார்க்கிறோம்.

எதிர்த்து வாக்களித்தவர்களுக்கும் நானே ஜனாதிபதி, அவர்களின் கருத்துக்களையும் நான் கவனத்தில் எடுப்பேன். எனது வெற்றி ஒவ்வொரு அமெரிக்கர்களினதும் வெற்றி என்ற உங்கள் முதல் உரை கேட்டு நாங்கள் பூரிப்படைந்தோம்.

கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் உங்கள் பண்பு, ஜனநாயகத்தையும், பன்மைத்துவத்தையும் பாதுகாக்க நீங்கள் கொண்டிருக்கும் திடம் என்பன ஜனநாயக வழியில் உரிமைக்காக உழைக்கும் எங்களுக்கு அளவிட முடியாத உறுதியையும் நம்பிக்கையையும் தந்துள்ளது.

மக்களின் விடுதலையும், உரிமைகளையும் வென்றெடுக்க சாத்தியமான வழிகளில் தனது போராட்டத்தை நடத்திய எமது கௌரவத்திற்குரிய தலைவர்களில் ஒருவரான சேர் மார்டின் லூதர் கிங் அவர்களின் கனவை இன்று நீங்கள் நனவாக்கியிருக்கிறீர்கள்.

எத்தனையோ அவமானங்கள், தோல்விகள் உங்களை எதிர்கொண்டபோதும், அதையெல்லாம் எதிர்கொண்டு தகர்த்து நீங்கள் வெற்றிக் கம்பத்தைத் தொட்டிருப்பது முழு அமெரிக்காவுக்கும் மட்டுமல்ல உலகமெல்லாம் பரந்து வாழும் மனித குலத்திற்கே பெருமையாகும்.

நேர்மையான உழைப்பு, உண்மையான மக்கள் சேவை, நியாயமான முயற்சியோடு கடமையைச் செய்தால், மக்களின் அங்கீகாரமான மகுடத்தைச் சூடலாம் என்பதை உலகிற்கு உணர்த்திய, வாழும் வழிகாட்டி நீங்கள்.

ஆயுத வன்முறையும், பயங்கரவாதமும் அழிவுகளையும், இழப்புக்களையுமே தரும். மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க அது சரியான வழியும் அல்ல. உலக ஒழுங்கில் அது ஏற்புடைய அணுகு முறையும் அல்ல என்ற எமது கொள்கைக்கு உங்கள் வெற்றி ஒரு உந்து சக்தியாக நிச்சயம் அமையும். வெற்றி நாயகனே நீண்ட ஆயுளுடன் நீங்கள் வாழ எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நாமும் எமது மக்களும் பெருமகிழ்ச்சியடைகின்றோம். (ஓ)

உன் அயலான் வீடு உனக்குத் தொந்தரவாக இருக்கின்றதா? அவனுக்குக் கடன் கொடு.

~ இத்தாலி

வலம்புரி

# மகிந்த-ரணில் இந்திய விஜயம் யுத்தத்தில் மாற்றம் தருமா?

2009 ஆம் ஆண்டுக்கான அரச வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டம் பற்றிய திறனாய்வுகள் எதுவுமே தேவையற்றவை என்ற நிலையில் அவற்றை ஒருபுறம் தள்ளி வைக்க முடியும்.

அதேநேரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் ஆசிரியர்கள் இரண்டு தடவைகள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர். இது அரசுக்கு ஏற்பட்ட அபகீர்த்தி எனலாம்.

இந்த நிலை தொடர்வதற்கான சாத்தியத்தை 2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமும் ஊக்குவிக்கும்போல் தெரிகின்றது. விசேடித்து எதுவுமே கூற முடியாத வரவு-செலவுத் திட்டம் என்பதை மட்டும் இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்வதைத் தவிர அது விடயத்தில் மௌனம் காப்பதே சிறப்புடையது.

எதுவாயினும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்று வரும் யுத்தம், அதனால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஈழத் தமிழர் ஆதரவலை என்ற நிலையில் இந்திய மத்திய அரசு இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட வேண்டிய ஓர் கட்டாயத்தை தோற்றுவித்துள்ளது.

இந்திய மத்திய அரசின் தலையீடு இலங்கையில் எவ்வாறு அமையும் என்பதை நிறுத்திட்டமாக வரையறுத்துக் கூற முடியாதாயினும்,

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்திய மத்திய அரசின் அழைப்பின் பேரில் இம் மாதம் அங்கு செல்ல இருப்பது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகக் கருதப்படும்.

இலங்கை இன விவகாரத்தில் இந்திய மத்திய அரசின் அழுத்தம் காத்திரமானதாக அமையும் எனவும், அதனூடாக இனப்பிரச்சினையில் திடீர் மாற்றம் ஒன்று விரைவில் ஏற்படும் என்றும் யாழ்ப்பாணத்தின் மூத்த வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்ட கருத்து இங்கு நோக்குதற்குரியது.

இலங்கை ஜனாதிபதியையும் எதிர்க்கட்சித் தலைவரையும் இந்திய மத்திய அரசு அங்கு வரவழைப்பதற்கான காரணம் என்ன என்பதும் முன்னதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசிய விடயம் யாது? என்பதும் இன்னமும் வெளிவராத விடயங்களாக இருக்கின்ற போதிலும் ஜனாதிபதி மகிந்த, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் ஆகியோர் இந்தியாவுக்குச் செல்வதில் ஏதோவொரு விடயத்தை இந்திய மத்திய அரசு வலியுறுத்தப் போகின்றது என ஊகித்துக் கொள்ளலாம்.

ஆனால் இந்த ஊகிப்பை நிதானப்படுத்துவதில் கலைஞர் கருணாநிதியின் தாச்சி விளையாட்டு இடையூறாக இருக்கின்றது.

# பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அச்சுறுத்தியே ஒப்புதல் வாக்கு மூலத்தை பெற்றுக் கொண்டனர்

## ஊடகவியலாளர் ஜே. எஸ். திஸ்ஸநாயகம்

(கொழும்பு)

கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தாம் மோசமான முறையில் துன்புறுப்பட்டதாக ஊடகவியலாளர் ஜே.எஸ் . திஸ்ஸநாயகம் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத விசாரணைப்பிரிவினரால் தம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் அச்சுறுத்தல்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதென உயர் நீதிமன்ற நீதவான் தீபாலி விஜே சுந்தரவிடம் திஸ்ஸநாயகம் தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனத்தில் பணியாற்றும் ஜசிகரன் மற்றும் அவரது மனைவியைப் பார்வையிட பயங்கர்வாதப் விசாரணைப் பிரிவிற்கு சென்ற போது எவ்வித காரணமும்மின்றி தாம் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக சட்டத்தரணி ஒருவருடன் தொடர்பு கொள்ளக்கூடியவாய்ப்பைக்கூட பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மறுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் பொய்யான தகவல்களை வழங்கினால் ஜசிகரனுக்கு ஏற்பட்ட நிலையே தமக்கும் நேரும் என அச்சுறுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். ஜசீகரன் கொடுமையாக தாக்கப்பட்டிருப்பதனை தாம் நேரில் கண்டதாக திஸ்ஸ நாயகம் தெரிவித்துள்ளார் .மேலும் மூத்த ஊடகவியலாளர் சிவராம் படுகொலை செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு அருகாமையில் உள்ள புதருக்குள் போடப்பட்ட சம்பவத்தை நினைவில் நிறுத்தி விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பயங்கரவாத விசாரணைப்பிரிவுகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

வைத்திய பரிசோதனைகளின் போதும் உண்மை நிலையை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் கிட்டவில்லை எனவும் அனைத்த சந்தர்ப்பங்களிலும்பயங்கரவாத விசாரணைப் பிரிவினரும் தம்முடன் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஊடகவியளார் திஸ்ஸநாயகம் சார்பில் அனில் சில்வா சுமந்திரன் சார்மெஜன்து ஆகிய உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர். (ஓ-6)

# எரிபொருள் பற்றாக்குறை காரணமாக வன்னியில் நோயாளர் காவுவண்டி சேவைகள் பாதிப்பு

(கொழும்பு)

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் நோயாளர் காவுவண்டிசேவை பாதிக்கப் பட்டுள்ளதாக முல்லை மாவட்ட பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஒஸ்மான் சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளிலிருந்து நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டியுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நாங்கள் ஒவ்வொரு நாளும் செல்வதைக் குறைத்து கிழமைக்கு மூன்று அல்லது இரண்டு முறைதான் எமது நோயாளர் காவுவண்டிச் சேவையை நடாத்திவருகின்றோமெனக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் சம்பந்தமாக அரச அதிபருக்கும் சம்பந்தப்பட்ட திணைக் களங்களுக்கும் அறிவித்துள்ளதாகவும் அரச அதிபர் இது விடயம்சம்பந்தமாக சம்பந்தபட்டவர்களுடன் தொடர்பு கொண்டு எமக்கு வெகுவிரைவில் எரிபொருளைப் பெற்றுத் தருவதாகவும் உறுதிகூறியுள்ளாரென அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ஓ)

# இனப்பிரச்சினைக்கான போரின் உண்மை நிலைமையை வெளிக்கொணரவே மாற்று பாதுகாப்பு மையம்

## மங்கள சமரவீர விளக்கம்

(கொழும்பு)

தம்மால் மாற்று பாதுகாப்பு தகவல் மையம் ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கான காரணத்தை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மக்கள் பிரிவு ஏற்பாட்டாளர் மங்கள சமரவீர விளக்கியுள்ளார். மக்களின் மத்தியில் உள்ள போர் பற்றிய கருத்துக்கள் மற்றும் நடைமுறை போர் பற்றிய தகவல்கள் இன்மை காரணமாகவே இந்த மாற்று பாதுகாப்பு தகவல் மையத்தை ஏற்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க ஊடகங்களில் வெளிவரும் தகவல்கள் பெரும்பாலும் அரசியலோடு ஒன்றிணைந்துள்ளமையால் பாதுகாப்பு படையினரின் குடும்பங்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் பிரசாரங்கள் காரணமாக சமூகத்தில் உள்ளோர் வன்முறைக்கு தூண்டப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் இன்று நாட்டில் பாரிய முதலீட்டைக் கொண்டுள்ள ஒரு துறையாக உள்ளது. எனவே மக்கள் அது தொடர்பான முழுமைத் தகவல்களை அறிந்து கொள்வது அவசியம். உண்மைக்கு புறம்பான தகவல்கள் வெளியாவதால் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்று மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

போர் எப்போது பிரகடனப்படுத்தப்படுகிறதோ அங்கு உண்மைக்கே முதல் பாதிப்பு எனக் கூறுவர். இந்நிலையில் இனப் பிரச்சினைக்கான போரின் உண்மை நிலைமையை தாம் வெளிக்கொணரவே மாற்று பாதுகாப்பு மையத்தை பற்றி சிந்தித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பின் கீழ் போரின் உண்மைநிலையை வெளிப்படுத்தல்,போர் வீரர்கள் யுத்தகளத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ,போர் பாதிப்பு விபரங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளும் மனித உரிமை மீறல்களும், போர்தொடர்பாக ஊடக அடக்குமுறை தொடர்பான தகவல்கள் என்பன தமது அமைப்பின் மூலம் வெளியிடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# கிழக்கில் ஒரு வாரத்தில் 11 துணை இராணுவக் குழுவினர் பலி

(கொழும்பு)

கிழக்கின் பல பகுதிகளில் கடந்த ஒரு வாரத்தில் நடை பெற்ற தாக்குதல்களில் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவைச் சேர்ந்த 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இலங்கை படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளதா வது,

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் கடந்த வாரம் நடைபெற்ற தாக்குதல்களில் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் கருணா குழுவைச் சேர்ந்த 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த புதன் கிழமை ஏறாவூர் பகுதியில் அமைந்திருந்த துணை இராணுவக்குழுவின் காரியாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில் இயங்கி வரும் ஒரு ஆயுதக்குழுவினரே இந்த தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக இலங்கை காவல்துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிமை இரவும் கருணா குழுவைச் சேர்ந்த ஐந்து பேர் கல்முனையில் உள்ள கும்பியடி கடற்கரைப் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

கருணா குழுவைச் சேர்ந்த மேலும் நான்கு பேர் ஏறாவூர் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப் பட்டிருந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## முழுப்பொறுப்பையும் உன் தோள்களில் ஏற்றுக்கொள்



சொந்தக்காலிலேயே நில்லுங்கள், பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் அனுபவிக்கும் இந்தத் துன்பத்திற்கு நானே காரணம். ஆகவே நானேதான் இதற்குப் பரிகாரமும் தேடிக்கொள்ள வேண்டும், என்று உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். நான் படைத்ததை நானே அழிக்க முடியும். மற்றவர்கள் படைத்ததை என்னால் அழிக்க முடியாது. ஆகவே எழுந்திருங்கள், உறுதியுடனும் தைரியத்துடனும் இருங்கள். பொறுப்பு முழுவதையும் உங்கள் தோளிலேயே சுமந்து கொள்ளுங்கள். உங்கள் விதிக்கு நீங்களே காரணம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் விரும்புகின்ற வலிமையும் உதவியும் உங்களுக்குள்ளேயே இருக்கின்றன. உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள் போனது போகட்டும் எல்லையற்ற எதிர்காலம் உங்கள் முன்னே இருக்கிறது. உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வோர் எண்ணமும், ஒவ்வொரு செயலும் அதற்கு ஏற்றபலனை உண்டாக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். தீயசெயல்களும் தீய எண்ணங்களும் புலிகளைப்போல் நம்மீது பாயத் தயாராக இருக்கின்றன. ஆனால் அதோடு கூடவே நல் எண்ணங்களும் நற்செயல்களும் பல்லாயிரக்கணக்கான தேவதூதர்களைப் போல் நம்மைக் காப்பாற்ற எப்போதும் தயாராக இருக்கின்றன.

# இலங்கை அரசை போர்நிறுத்தம் செய்யுமாறு இந்திய அரசு தொடர்ந்து வற்புறுத்த வேண்டும்

## தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி



போர்நிறுத்தம் செய்வதற்கு இலங்கை அரசை இந்திய மத்திய அரசாங்கம் தொடர்ந்து வற்புறுத்த வேண்டும் என்று தமிழகத்தின் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

சென்னை சேப்பாக்கத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்கம் சார்பில் இலங்கையில் போர்நிறுத்தத்தை வற்புறுத்தி உண்ணாநிலைப் போராட்டம் நடத்தினர்.

இந்த உண்ணாநிலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை வாழ்த்தி கனிமொழி உரையாற்றியபோது மேலும் தெரிவித்ததாவது,

சிங்கள மொழி என்று இலங்கையின் ஆட்சி மொழியாக மாற்றப்பட்டதோ, புத்த மதம்தான் அந்த நாட்டின் மதமாக சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டதோ அன்றே தமிழர்களின் போராட்டமும் தொடங்கியது.

1957 ஆம் ஆண்டு செல்வாக்கும், இலங்கையை ஆட்சி செய்துகொண்டிருந்த பண்டாரநாயக்காவுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்றப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் படி தமிழர்களுக்கு உரிமைகள் திருப்பி தரப்படும் என்றும் அவர்களுக்கு சட்டபூர்வமாக அந்த நாட்டில் சமக்குடிகளாக கருதப்படுவார்கள் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் முதல் இலங்கை அரசு இதுவரை இயற்றிய எந்த ஒப்பந்தத்திற்கும் ஒரு காகிதத்தின் மதிப்பைக் கூட கொடுக்கவில்லை என்பது தான் உண்மை.

உலகத்தில் எந்த இடத்தில் போர் நடந்தாலும் உலக சமாதான நிறுவனங்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படும். செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அங்கு உள்ள மக்களுக்கு உதவிகள் அளிக்கப்படும். ஆனால் இலங்கையில் மட்டும் செஞ்சிலுவைச் சங்கத்தை துரத்திவிட்டார்.

ஐ. நா சபையைச் சேர்ந்த அமைப்புக்கள் எல்லாம் விரட்டப்பட்டது இலங்கை அரசு அங்குள்ள தமிழர்களை எப்படி நடத்துகிறது என்ற உண்மை நிலை நமக்குத் தெரிவது இல்லை.

முகாமில் இருக்கும் தமிழர்களை விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களா என்று கேட்டு சித்திரவதை செய்கிறார்கள். முகாமில் இருக்கும் தமிழர்களின் கதி என்ன என்பது இதுவரை தெரிவது இல்லை. இவ்வாறு மனித உரிமைகள் மீறப்படுகிறது.

இலங்கை அரச தலைவர் ராஜபக்ச இந்த போர் முடிந்த பிறகு தீமிழர்களுக்கு நியாயம் கிடைக்க செய்துவிடுவேன் என்று கூறுகிறார். இலங்கை அரசு இந்தியாவிடம் ஒன்று சொல்லுகிறது. உலக நாடுகளிடம் பேசும்போது வேறுவிதமாக பேசுகிறார்கள். ஆகவே எது உண்மை என்பதை நாம் கேட்க வேண்டாமா? இலங்கை தமிழர்களுக்கு தீர்வுகாண போர் நிறுத்தம் மட்டும் தான் வழி.

இப்படி தன்னிடம் ஆயிரம் குறைபாடுகளை வைத்துக்கொண்டு இருக்கும் இலங்கை அரசு போரை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரும் போதுதான் இந்த போராட்டத்திற்கு தீர்வு கிடைக்கும் என்பதை நாம் மீண்டும் வலியுறுத்திக்கொண்டே இருக்க வேண்டும். அதுதான் நமது கடமை.

இந்திய அரசு தன்னால் முடிந்த அத்தனை வழிகளிலும் போர் நிறுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சொல்லிகொண்டே இருக்கவேண்டும். முடிந்தால் உலக நாடுகளோடு பேச வேண்டும் என்றார் அவர். ஓ

# பாம்பன் அருகேயுள்ள குருசடைதீவில் இந்திய காவல்துறை அதிரடி சோதனை

## -புலிகள் ஊடுருவியுள்ளதாக சந்தேகம்

(பனைக்குளம்)

இலங்கையில் நடந்து வரும் சண்டை காரணமாக தமிழர்கள் அகதிகளாக இராமேஸ்வரம் வந்த வண்ணம் உள்ளனர். அகதிக்ள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் ஊடுருவி வருவதாகக் கூறப்படுகிறது.

பாம்பன் அருகே உள்ள குருசடை தீவில் கடத்தல்காரர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பதாக இந்தியக் கடலோர காவல் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து இந்தியக் காவல் படையினர் தரையிலும் தண்ணீரிலும் செல்லக் கூடிய ஹோவர் கிராப்ட் கப்பலில் ரோந்து சென்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு குருசடை தீவில் கடத்தல்காரர்கள் பதுக்கிய ஏராளமான ஆயுதங்களைக் கண்டு பிடித்து பறிமுதல் செய்தனர். எனவே தற்போது ஆயுதங்கள் பதுக்கி இருக்க கூடும் என கருதி துப்பாக்கியுடன் குருசடைதீவு முழுவதும் அதிரடி சோதனை நடத்தின்ார்கள். விடிய விடிய இந்த சோதனை நடத்தப்பட்டது. ஆனால் சோதனை நடந்த விபரத்தை கடற்படை அதிகாரிகள் தெரிவிக்க மறுத்துவிட்டனர். எனினும் இராமேஸ்வரம் கடற்கரை முழுவதும் விடுதலைப் புலிகள் நடமாட்டம் குறித்து இந்திய கடலோர காவல் படையினர் தீவிரமாக கண்காணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஓ

# கோபுரத் திருப்பணிக்கான பொருள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

மேற்படி கோபுரத் திருப்பணிக்கான பொருட்களை மொத்தமாக வழங்கக் கூடிய வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. பொருட்களை குறிகட்டுவான் இறங்குதுறையில் ஒப்படைக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

பொருட்களின் வகை, தரம் ஆகியன சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1.சீமெந்து | – 1 பைக்கற்றின் விலை |
| 2.முறுக்குக் கம்பி | – 1 அந்தரின் விலை |
| 3. கல்வனைஸ் பைப் | – 1 பைப். 1 1/4 ", 1 1/2". 2" |
| 1பைப் | – தனித்தனியாக விலையைக் குறிப்பிடவும். |
| 4. கண்ட கல்லு | – 8"....1 வரை (சைமண் கல்) |
| | – 1 கியூப்பின் விலை |
| 5. வெள்ளைக் கல் | – 1 யாரீன் விலை |
| 6. சல்லிக் கல் | – 3/4", 5 நூல், 1" |
| | – 1 கியூப்பின் விலை |
| 7.மணல் | – நாகர் கோவில் |
| | – 1 கியூப்பின் விலை |

கூறுவிலை கோரப்பட்டு தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் பொருட்களை தேவைக்கேற்ப விநியோகிக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும். கூறுவிலைகள் முத்திரையிடப்பட்டு 15.11.2008 க்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். 16.11.2008 இல் கூறுவிலைகள் திறக்கப்படும். கடித உறையின் இடதுபக்கத்தில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிடவும்.

கு.சரவணபவானந்தன் J.P
செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C/1766)

# கூடைப்பந்தாட்ட இறுதி போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

EXPO AIR மற்றும் சண்முகம் சைவ உணவகத்தின் ஆதரவுடன் யாழ்.நகர் மைய் றோட்டறக்ட் கழகம் நடாத்திய கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியின் பெண்களுக்கான போட்டியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் உடுவில் மகளிர் கல்லூரி அணியை 61:31 என்னும் நிலையில் வெற்றிகொண்டது.

இதில் தொடரின் ஆட்ட நாயகியாக உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ.மேர்சியும், ஆட்டநாயகியாக யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த ஆர்.சானுஜாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆண்களுக்கான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி புனித பரியோவான் கல்லூரி அணியை 67:31 என்ற நிலையில் வெற்றிகொண்டது. இதில் தொடர் ஆட்டநாயகர்களாக சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த அபிகரன் மற்றும் யாழ்.ம்த்திய கல்லூரியைச் சேர்ந்த திவாகரன் ஆகியோர் தெரிவுசெய்யப்டனர்.

ஆட்டநாயகனாக யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆர்.பிரசாத்மன் தெரிவுசெய்யப்பட்டார்.

றோட்டறக்ட் கழகங்களுக்கிடையிலான போட்டியில் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் யாழ்ப்பாண றோட்டறக்ட் கழகத்தினை 27:26 என்ற நிலையில் வெற்றிகொண்டது. ஓ

# இலவச உலருணவு நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பொருட்களை களஞ்சியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் பொழுது அவற்றின் தரத்தினை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு ப.நோ.கூட்டுறவு சங்கங்களுக்கு அறிவுறுத்தல்கள் பலமுறைகளில் வழங்கப்பட்டிருந்தன என்றும் உடனடியாக ப.நோ.கூட்டுறவு சங்கங்கள் தரமான பொருட்களை பொதுமக்களுக்கு விநியோகிக்குமாறும் எக்காரணம் கொண்டும் தரமற்ற பொருட்களை விநியோகிக்க வேண்டாம் எனவும் அரசாங்க அதிபர் அறியத் தந்துள்ளார். ஓ

# ஈழத் தமிழர்கள் சிந்தும் ஒவ்வொரு சொட்டு குருதிக்கும் இந்திய அரசே பொறுப்பு

## வைகோ தெரிவிப்பு

ஈழத்தில் தமிழர்கள் சிந்தும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திற்கும் தமிழ்ப் பெண்களின் மரணத்திற்கும் மன்மோகன் சிங் அரசும் தமிழக அரசும் தான் முழுப் பொறுப்பு என ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வை.கோ.கூறினார்.

இலங்கைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடவும் தயங்கமாட்டோம் என்று பேசிய வைகோவும் தனி ஈழம்போல தனித் தமிழ் நாடும் விரைவில் உருவாகும் என்று பேசிய கட்சியின் அவைத்தலைவர் கண்ணப்பனும் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களுக்கு காவல் நீடிப்பு தேவையில்லை. விசாரணை முடிந்துவிட்டதென தமிழக அரசு கூறிவிட்டதையடுத்து நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இவர்களை விடுவித்தது. நீதிமன்ற வாசலில் நிருபர்களிடம் வைகோ பேசுகையில்,

நான் பேசியதில் எந்தத் தவறும் இல்லை.

ஈழத் தமிழர்களை பாதுகாக்க விடுதலைப் புலிகள் தான் போராடி வருகிறார்கள். இலங்கை அரசு அவர்களைக் கொன்று குவித்து வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்தாமல் இந்திய அரசும் அதில் அங்கம் வகிக்கும் தமிழக அரசும் இலங்கை அரசுக்கு உடந்தையாக செயற்பட்டு வருகின்றன.

இந்திய அரசு இலங்கை அரசுக்கு ஆயுத உதவியைச் செய்கிறது. ரூபா 2ஆயிரம் கோடியை கடனாகக் கொடுத்துள்ளது. தொழில்நுட்ப உதவிகளையும் செய்து வருகிறது. இப்போது ஈழத்தமிழர்களுக்கு நிவாரண நிதி என்று முதலமைச்சர் கருணாநிதி நாடகம் ஆடி வருகிறார். ஈழத்தமிழர்களுக்கு 800 டன் உணவுப்பொருட்கள் அனுப்புவதாகக் கூறுவது கண்துடைப்பு நாடகம். அது சிங்களஅரசுக்குத்தான் பயன்படும் .

இங்கு திரட்டப்படும் நிதிகூட சிங்கள அரசுக்குத்தான் பயன்படும்.போரை நிறுத்தாவிட்டால் பொருளாதார தடைவிதிப்போம், வர்த்தக ஒப்பந்தத்தை இரத்துச் செய்வோம் என்று கூறினால் இலங்கை அரசு வழிக்கு வந்திருக்கும்.அத்தகைய தைரியம்மன்மோகன் சிங் அரசிற்கு இல்லை. ஈழத்தில் தமிழர்கள் சிந்தும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திற்கும் தமிழ்ப் பெண்கள் மரணத்திற்கும் மன்மோகன்சிங் அரசு முழுப்பொறுப்பேற்க வேண்டும். தமிழக அரசும் பொறுப்பேற்க வேண்டும்.

பேச்சுரிமைக்கு உச்சநீதிமன்றம் தடை விதிக்கவில்லை.உச்சநீதிமன்றத்தில் பொடா வழக்கில் கைதுசெய்த போது இதை உச்சநீதிமன்றத்தில் கூறினேன். எனவே என்னை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைத்தது சட்டவிரோதம் என்றார் வைகோ.பின்னர் தனது கட்சி அலுவலகமான தாயகம் சென்ற வைகோவும் கண்ணப்பனும் அந்த வளாகத்தில் உள்ள அண்ணாசிலைக்கு மாலை அணிவித்தனர்.

அப்போது அங்கு கூடியிருந்த தொண்டர்கள் மத்தியில் வைகோ பேசுகையில், போராட்டத்தில் முன்வைத்த காலை பின் வைக்காமல் எதற்கும் அஞ்சாமல் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக பாடுபடும் கட்சி ம.தி.மு.க என்பதை மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளோம். அவைத்தலைவர் கண்ணப்பனும் நானும்பேசியது தேசவிரோத கருத்துக்களில்லை என்பதை நிலைநாட்டி இங்கு வந்துள்ளோம். இலங்கை படுகொலையை தடுக்க இயக்கம் தொடங்கிய நாளில் இருந்து ஒருநிலைப்பாட்டில் இருக்கிறோம் என்றார். ஓ

# கிரஜ்ஜாவிடம் பணிந்தது இந்திய அணி; ஹட்டிச்-ஹசியின் இணையால் ஆஸி.பதிலடி

(நாக்பூர்)

ஹட்டிச், ஹசியின் சிறப்பான இணைப் பாட்டத்திலால் அவுஸ்திரேலிய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 189 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முன்னதாக இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 441 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்



டுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது மற்றும் மூன்றாவது டெஸ்ட் சமநிலையில் முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்டில் வெற்றிபெற்று இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்றுமுன்தினம் நாக்பூரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நேற்று முன்தினம் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 311 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு கங்குலி–தோனி ஜோடி சிறப்பான இணைப் பாட்டத்தை வழங்கியது.

இதில் பொறுப்புடன் ஆடிய கங்குலி தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்ய இந்திய அணி 400 ஓட்டங்களை கடந்தது.

இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர்கள் போராடியும் பலன்கொடுக்கவில்லை. பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய தோனியும் 88 ஆவது பந்தில் தனது அரைச் சதத்தை கடந்து அசத்தினார்.

### கிரஜ்ஜா மயாஜாலம்

இந்த ஜோடி 6 ஆவது விக்கெட்டுக்காக 119 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் தோனி 56 ஓட்டங்களுடன் கிரஜ்ஜாவின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹர்பஜன் சிங் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய கங்குலி 85 ஓட்டங்களுடன் கிரஜ்ஜாவின் பந்துவீச்சில் கிளாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து 2 விக்கட்டுக்களையிழந்த இந்திய அணி 423 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுக்களையிழந்தது.

அடுத்து 8ஆவது விக்கெட்டுக்காக ஹர்பஜன் சிங்குடன் இணைந்த சகீர்கான் நிதானமாக ஆடினார். எனினும் சகீர்கான் ஒரு ஓட்டத்தை எடுத்த போது கிரஜ்ஜாவின் பந்து வீச்




சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்துவந்த மிர்ஷா, கிஷாந் சர்மா ஆகியோரும் வந்த வேகத்திலேயே ஓட்டமெதனையும் எடுக்காமல் கிரஜ்ஜாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 440 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையுமிழந்தது.

இதில் ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் தனது கன்னி டெஸ்டில் விளையாடிய கிரஜ்ஜா 43.5 ஓவர்கள் பந்துவீசி 215 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களை அள்ளினார்.

மற்றும் ஜோன்ஸன், வோட்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார். பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஹைடன்–ஹட்டிச் ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் அணி 32 ஓட்டங்களை எடுத்த போது ஹைடன் 16 ஓட்டங்களை எடுத்த போது விஜயினால் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழப்பு செய்யப்பட்டார். அடுத்து களமிறங்கிய பொன்டிங் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுத்தார்.

### ஹர்பஜன் '300'

எனினும் பொன்டிங் 24 ஓட்டங்களை எடுத்தபோது ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

பொன்டிங்கின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் ஹர்பஜன் சிங் டெஸ்டில் தனது 300 ஆவது விக்கெட்டை வீழ்த்தினார்.

### சரிவிலிருந்து மீட்டனர் ஹட்டிச்–ஹ்சி ஜோடி

74 ஓட்டங்களை மாத்திரம் மெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறிய அவுஸ்திரேலிய அணிக்கு 3 ஆவது விக்கெட்டுக்காக ஹட்டிச்சுடன் ஜோடி சேர்ந்த ஹசி நிதானமாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுத்தார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹட்டிச் தனது 55 ஆவது பந்தில் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இந்த ஜோடியின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 189 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஹட்டிச் 92 ஓட்டங்களுடனும் ஹசி 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலிருந்தனர். பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். போட்டியின் மூன்றாம் நாள் இன்றாகும்.

## டெஸ்ட் போட்டிகளையும் பகலிரவாக நடத்த ஆஸி. முயற்சி

டெஸ்ட் போட்டிகளுக்கு ரசிகர்கள் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, பகலிரவாக போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுவருகிறது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே இந்தியாவில் நடைபெற்றுவரும் போட்டிகளைக் காண குறைந்த அளவே ரசிகர்கள் வருகின்றனர். மற்றைய நாடுகளில் இது மேலும் மோசமாகியுள்ளது.

இதனால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை மிகவும் கவலை அடைந்து, புதிய மாற்றம் கொண்டுவர முயற்சி மேற்கொண்டுள்ளதாக சபையின் முதன்மைச் செயல் அதிகாரி ஜேம்ஸ் சுதர்லாண்ட் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளைப் போன்று பகலிரவாக டெஸ்ட் போட்டிகளையும் நடத்துவதே அதற்கு தீர்வு எனவும் அவர் கூறியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகள் அதன் வழியிலிருந்து விலகிச் செல்வதையாரும் விரும்பவில்லை.

அதேசமயம் தற்போதைய ரசிப்புத் தன்மைக்கேற்றவாறு அது மாற்றியாக வேண்டியது அவசியம். அதற்காக கிரிக்கெட் வல்லுநர்களுடன் சேர்ந்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆலோசனை நடத்தி வருகின்றது.

டெஸ்ட் போட்டியை இரவில் நடத்தும் போது பனியால் பந்துகள் பாதிக்காதவாறு இருக்க வேண்டும். அது இரவில் வீரர்களுக்கு நன்றாகத் தெரியும்படியாகவும் தயார் செய்ய ஆய்வு செய்து வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளார் சுதர்லாண்ட்.

## ஓய்வு முடிபைக் கைவிட்டு மீண்டும் அணிக்குத் திரும்ப மாட்டேன்

### ஷேன் வோர்ன் தெரிவிப்பு

அவுஸ்திரேலிய அணியிலிருந்து வோர்ன், மெக்ராத், கில்கிறிஸ்ட், மார்ட்டின் போன்ற வீரர்கள் ஓய்வு பெற்று விட்டதால் அவுஸ்திரேலிய அணி பல்வீனமாகிவிட்டது.

இந்திய அணியுடன் டெஸ்ட் போட்டியில் ஆடி வரும் அந்த அணி மிக மோசமாக ஆடி வருகின்றது. எனவே முன்னணிப் பந்து வீச்சாளரான வோர்ன் தனது ஓய்வு முடிபைக் கைவிட்டு மீண்டும் அணிக்குத் திரும்ப வேண்டும் என்று அவுஸ்திரேலிய ரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி வோர்னிடம் கேட்டபோது அவர் கூறியதாவது,

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று விட்ட நான் இப்போது எனது குழந்தைகளுடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்கின்றேன். எனது அறக்கட்டளை மூலம் ஏராளமான சமூகப் பணிகளை செய்கின்றேன்.

எனது வியாபாரப் பணிகளைச் சிறப்பாகக் கவனித்து வருகின்றேன். எனவே ஓய்வு முடிபைக் கைவிட்டு என்னால் மீண்டும் அணிக்குத் திரும்ப முடியாது. அதேநேரத் தில் எனக்குக் கிரிக்கெட் மீதுள்ள ஆர்வம் குறையவில்லை.

எனவேதான் இந்தியன் பிரிமியர் லீக் இருபது–20 போட்டியில் ராஜஸ்தான் றோயல் அணிக்காக ஆடி வருகின்றேன். இதற்காக இந்த மாதம் இந்தியா செல்ல இருக்கின்றேன்.

ஆனாலும் நான் அணிக்குத் திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

## குழந்தைகள் சுகாதாரத்தில் அக்கறை செலுத்தும் சச்சின், கோர்னிகோவா




ரஷ்ய டென்னிஸ் புயல் அன்னா கோர்னிகோவாவுக்கு சமூக சேவையில் ஆர்வம் அதிகம். இந்திய வீரர் சச்சினைப் போல குழந் தைகளின் சுகாதாரத்தில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகின்றார்.

ஐ.நா. சபை சார்பில் குழந்தைகள் சவர்க்காரம் போட்டு கை கழுவுவதன் அவசியத்தை உணர்த்தி விழிப்புணர்வு முகாம் சமீபத்தில் நடந்தது.

இதன் தூதராக நியமிக்கப்பட்ட நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின், குழந்தைகள் மத்தியில் சுகாதாரத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார். இந்தியாவில் மட்டும் ஆண்டுதோறும் சுமார் ஆயிரம் குழந்தைகள் வயிற்றுப் போக்கு நோயால் மரணமடைகின்றனர்.

இதற்கு கைகழுவாமல் சாப்பிடுவதே முக்கிய காரணம். எனது குழந்தைகளுக்குக் கை கழுவுவதன் அவசியத்தை அடிக்கடி நினைவு படுத்துவேன். கொடிய நோய்களிடமிருந்து குழந்தைகளைக் காப்பாற்றலாம் என்றார் சச்சின்.

இதேபோல டென்னிஸ் நட்சத்திரம் அன்னா கோர்னிகோவாவும் குழந்தைகளின் சுகாதாரத்தை மேம்படுத்தப் பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

சமீபத்தில் மேற்குப் பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள குவாம் தீவுக்கு வந்திருந்தார். இங்குள்ள இராணுவப் பாடசாலைக்குச் சென்ற அன்னா, குழந்தைகளிடம் ஆர்வமாக நலன் விசாரித்தார்

கை கழுவுதல் மற்றும் சுகாதாரமாக இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். எனக்குக் குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்கும். இவர்கள் மத்தியில் சுகாதாரத்தின் முக்கியத்தை உணர்த்துவதே எனது இலக்கு.

எனது ஆலோசனையை ஐந்து குழந்தைகள் பின்பற்றினால் கூட சந்தோஷம்தான் என்று உற்சாகமாகச் சொன்னார்.




## கிரிக்கெட்டிலிருந்து இப்போதைக்கு ஓய்வில்லையாம்– டெண்டுல்கர்

(டில்லி)

கிரிக்கெட்டிலிருந்து தற்போதைக்கு ஓய்வு பெறப்போவதில்லை என நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய டெண்டுல்கர் கூறியதாவது, எனது உடல் நிலை நன்றாக உள்ளது. எனவே இப்போதைக்கு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் வாய்ப் பில்லை.

பொதுவாக நான் தற்போது என்ன செய்யப் போகிறேன் என்பதை பற்றி மட்டுமே யோசிப்பேன், இன்னும் 5 அல்லது 6 வருடங்களுக்குபின் என்ன செய்யவேண்டும் என்பதை பற்றி யோசிக்க மாட்டேன்.

கிரிகெட்டிலிருந்து ஓய்வு பெறவேண்டும் என நினைத்தால் அதை பகிரங்கமாக அறிவிப்பேன். எனது ஓய்வுச் செய்தி பரபரப்பாக பேசப்படும், ஆனால் அதைப்பற்றி எனக்கு கவலையில்லை, ஏனென்றால், அது மறைக்க வேண்டிய விடயமில்லை என கூறினார்.

# மேலதிக நீதவான் அலெக்ஸ்ராஜா வவுனியா நீதிபதியாக நியமனம்

(கொழும்பு)

மல்லாகம் மாவட்ட நீதிபதியாகவும் மல்லாகம் நீதிவானாகவும் மன்னார் மாவட்ட நீதிபதியாகவுள்ள திருச்செல்வம் ஜோஜ் பிரபாகரன் இடமாற்றம் பெற்றுள்ளார்.

அத்துடன் பருத்தித்துறை மல்லாகம் மற்றும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றங்களில் மேலதிக நீதிவானாகவுள்ள ஆசீர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா வவுனியா மாவட்ட நீதிபதியாகவும் வவுனியா நீதிவானாகவும் இடமாற்றம் பெறுகிறார்.

மேலும் மல்லாகம் மேலதிக நீதிவான் அன்ரோ அமலவளன் ஆனந்தராஜா மன்னார் மாவட்ட நீதிபதியாகவும் மன்னார் நீதவானாகவும் இடமாற்றம் பெறுகிறார்.

இவர்களுக்கான இடமாற்றம் எதிர்வரும் 17ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வருமென நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை சாவகச்சேரி மாவட்ட நீதிபதியும் சாவகச்சேரி நீதவானாகவுமுள்ள அ.பிரேம்சங்கர் தரம் I நீதிபதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவால் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியும் பருத்தித்துறை நீதவானாகவுமுள்ள கே.அரியநாயகம் வகுப்பு I தரம் II நீதிபதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவால் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இவர்களுக்கான பதவியுயர்வு கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்ட நீதிவானாகவும் நீதிபதியாகவும் கடமையாற்றும் அந்தோனிப்பிள்ளை யூசுப் பருத்தித்துறை மேலதிக நீதிவானாகஇடமாற்றம் பெறுகிறார். (ச-5)

## இராணுவத்தின் வெற்றிக்கு...

புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை கடற்படையினர் வரையறுத்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் மகிழ்ச்சியளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் முன்பிருந்ததை விட மிகவும் முக்கியத்துவம் குறைந்த ஒரு தரப்பாகி வருகின்றனர் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

ஹவாய் பகுதியில் தலைமையகத்தைக் கொண்டுள்ள அமெரிக்க பசுபிக் பிராந்திய கூட்டுப்படைத் தளபதியான கேட்டிங் அவுஸ்திரேலியா,நியூசிலாந்து, சீனா, தாய்வான், ஜப்பான், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவராக உள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கை இராணுவத்தின் முன்னேற்றம் குறித்து எமக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டிருப்பதுடன்அது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

செய்வதற்கு பல பணிகள் உள்ளன என்பதை இலங்கை இராணுவமே முதல் முதலில் ஏற்றுக் கொண்டது என நான் நினைக்கிறேன். விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் தனது முயற்சியில் வெற்றியடைவதற்கு இலங்கை இராணுவத்துக்கு மேலும் பலமும் இயல்தகைமையும் தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## வரவு-செலவு...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக் களிக்கும் என கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றது.

(ச)

## எறிகணைத்...

மக்களை இடம்பெயர்த்தும் திட்டமிட்ட அவலப்படுதல் செயலை அரசு தொடர்ந்தும் புரிந்து வருகிறது.

(ச-5)

# இராணுவத் தளபதி வவுனியா விஜயம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுக்காலை வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

அங்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி வன்னிக் களமுனைகளில் தற்போதைய நிலைமைகள் குறித்து வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரியவுடனும் முக்கிய களமுனைத் தளபதிகளுடனும் விரிவாக கலந்துரையாடியதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை வன்னியில் போரை உச்சப்படுத்துவது தொடர்பாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படையதிகாரிகளுக்கு பணித்ததாகவும் கூறப்படுகிறது. (ச)

## மகா ஓயா பகுதியில்: புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புற பகுதியான மகா ஓயா பிரதேசத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மகா ஓயா பிரதேசத்தில் உள்ள தம்பட்டி எனும் இடத்தில் வீதிச் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படையினர் மீது நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் தாக்குதல் நடத்தியதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வீர் கொல்லப்பட்டனர். அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர் என புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

ஹற்றன் நஷனல் வங்கியின் வடக்கு-கிழக்கு பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் எ.பி.பிடில் தலைமையிலான குழுவினர் ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

யாழ்.வந்துள்ள இவர், குடாநாட்டிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கிகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயவுள்ளார், அத்துடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகக்கிளை புதிய கட்டடத்தையும் திறந்து வைப்பார்.

இதேவேளை யாழ்ப்பாணப் பாடசாலைகளின் மாணவப் பிரதிநிதிகளுடனும் இவர் சந்திப் பொன்றை மேற்கொள்ளவுள்ளார். (ச)

## குப்பிளானில் இரு இளைஞர்கள் ஆயுததாரிகளினால் கடத்தல்

குப்பிளான் தெற்கில் வைத்து 2 இளைஞர்கள் 6பேர் அடங்கிய ஆயுததாரிகளினால் கடந்த முதலாம் திகதி கடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மரிஷா நிமல்ராஜ் (வயது 27), ருக்மானந்தராஜா ஞானராஜா (வயது 22) ஆகிய இருவரும் அவர்களின் வீடுகளில் வைத்து கடத்தப்பட்டுள்ளனர். (ச-49)

## சிங்களவர்களுக்குச்....

மணியளவில் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் பேரணியின் முடிபில் கலைந்து செல்லும்போது பஞ்சிகாவத்தையிலுள்ள சிங்களவர்களுக்குச் சொந்தமான கடைகளை அடித்து நொருக்கினர்.

ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கடைகள் அடித்து நொருக்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்காக தடியடிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

ஆனால் கலகத்தில் ஈடுபட்ட முஸ்லிம் இளைஞர்கள் பொலிஸாரின் மீது தாக்குதல் நடத்தினர். கற்களும் வீசப்பட்டன. பொலிஸ் வாகனம் ஒன்றும் அடித்து சேதமாக்கப்பட்டது.

இந்தக் கலவரத்தினால் மருதானை, பஞ்சிகாவத்தை, மாளிகாவத்தை,ஆமர்வீதி சந்தி ஆகிய இடங்களூடான போக்குவரத்துக்கள் சிறிது நேரம் தடைப்பட்டது. வாகன நெரிசலும் ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த மேலதிக பொலிஸார் கலவரத்தை அடக்கினர். ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. குறித்த பிரதேசங்களில் படையினரும் மேலதிகமாக காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (ச-5)

## காலநேரம் சரியாக வரும்போது...

களையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்.எமது இயக்கம் ஓர் விடுதலை இயக்கம். அரச படைகளுக்கு எதிராக போராடுகிறோம். காலநேரம் வரும்போது சரியான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

**பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்ற இந்தியாவின் கோரிக்கைக்குப் பிறகு இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சு குறைந்திருக்கின்றதா?**

மாறாக கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள குடிமனைகள் மீது சரமாரியான பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏராளமான வீடுகள் அழிந்து நாசமாகியுள்ளன. ஒரு குடும்பத்தில் தந்தையும் தனையனும் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

**இந்தச் சூழலில் இந்தியாவிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?**

இலங்கைக்கான இராணுவ உதவிகளை நிறுத்தி, எமது இயக்கத்தின் மீதான தடையை நீக்கி, எம்மை அங்கீகரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஈழப்போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இருந்ததைப்போன்ற ஓர்ஆதரவு நிலை இப்போது மீண்டும் தமிழகத்தில் உருவாகியுள்ளதா?**

தமிழீழ மக்களும் தமிழக மக்களும் ஒரே குடும்பத்தவர்கள். தொப்புள்கொடி உறவுகள் போன்றவர்கள். எமக்கு ஒன்றென்றால் தமிழகம் கொதித்தொழும். இன உணர்வு தமிழகத்தில் நீறு பூத்த நெருப்பாக இருந்து வருகிறது.

இன்று தமிழகத்தில் சிறிலங்காவின் அரச படைகள் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிவுப் போரை மேற்கொள்ளும்போது அதற்கு எதிராக தமிழக மக்கள் கொதித்தெழுந்துள்ளார்கள். இதுவே யதார்த்தம்.

**தமிழகத்தில் உருவாகியுள்ள இந்த ஆதரவுநிலை ஈழப்போராட்டத்துக்கு எந்தவகையில் உதவியாக இருக்கும்?**

தமிழீழ மக்களின் அரசியல் அபிலாஷைகளை முழு இந்திய மக்களும் அரசியல் தலைமைகளும் புரிந்துகொண்டு எமக்கு ஆதரவாக வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

**வைகோ, அமீர், சீமான் ஆகியோர் உங்களை ஆதரித்ததற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்களே? ஈழஆதரவு நிலைப்பாடு தமிழக கூட்டணி அரசியலில் மாற்றங்களை உருவாக்கும் போலிருக்கிறதே?**

தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒரே அணியின் கீழ் அணி திரள்வதையே நாம் விரும்புகின்றோம். தமிழக உள்ளூர் அரசியலுக்குள் தலையிடாமல் இருப்பதே எமது கொள்கையாகும். தமிழர்கள் என்ற ரீதியில் எல்லோரையும் அரவணைத்துச் செல்வதையே நாம் விரும்புகின்றோம்.

**மூத்த தமிழ் அரசியல்வாதியாகவும் தமிழக முதல்வராகவும் ஈழப்போராட்டத்தில் கலைஞரின் செயற்பாடுகள் குறித்த உங்கள் அபிப்பிராயம் என்ன?**

கலைஞர் எமக்கு தந்தைபோன்றவர். இன உணர்வு மிக்கவர். தமிழர்கள் எல்லோரும் சுயமரியாதையோடு வாழவேண்டும் என்பதில் அக்கறையுள்ளவர். ஈழத்தமிழர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டபோதெல்லாம் என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனை பணிகளையும் ஜனநாயக வழியில் செய்து வருகிறார்.

**நீங்கள் ஜெயலலிதாவை கொலை செய்ய குறி வைத்திருப்பதாகவும், அதனால்தான் அவருக்கு இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறாரே?**

இவ்வாறான கருத்துகளும் பிரசாரங்களும் எமக்கு எதிரான சக்திகளால் தமிழக அரசியல் தலைமைகளை எமக்கு எதிராக திருப்பிவிடும் நோக்கில் உருவாக்கப்பட்ட கட்டுக்கதையாகும். இவ்வாறான புனைக்கதைகளை கேட்கும்போது எமக்கு மிகவும் வேதனையாகவும் துன்பமாகவும் இருக்கின்றது.

இவ்வாறான புனைக்கதைகளை உருவாக்க வேண்டாமென சம்பந்தப்பட்ட தரப்பினரை மிகவும் அன்பாக கேட்டுக்கொள்கின்றோம் என்றார் பா.நடேசன். (ச)

## 11ஆம் திகதி...

ரூபாவுக்கு4, 46-50 ரூபாவுக்கு 5, 52-69 ரூபாவுக்கு 6, 71-73 ரூபாவுக்கு 7, 75-87 ரூபாவுக்கு 8, 90-95 ரூபாவுக்கு 9, 97-116 ரூபாவுக்கு 10, என்றவாறு பஸ் கட்டணம் குறைக்கப்படுகிறது.

பஸ் கட்டணம் இவ்வாறு குறைக்கப்படுவதன் மூலம் இலங்கை போக்குவரத்து சபை கட்டணமும் தனியார் பஸ் கட்டணமும் சமநிலைக்கு வருவதாக போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இவ்வருடம் மே மாதம் கொண்டுவரப்பட்ட பஸ் கட்டண திருத்தத்திற்கு ஏற்ப தனியார் பஸ் கட்டணத்தை விட போக்குவரத்துச் சபை கட்டணம் 10 வீதம் குறைவாகவே இருந்தாக ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது. (ச-5)

## இந்திய-இலங்கை...

ராஜீவ்-ஜே.ஆர்.ஒப்பந்தப்படி தீர்வு காணுமாறு எதிர்வரும் 12ஆம் திகதி இந்தியா செல்லவுள்ள மகிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்த விடயத்தை நேரிலும் வலியுறுத்துவார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்தியாவில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஈழத்தமிழர் ஆதரவால் மிரண்டுபோன ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியப் பிரதமரை தொலைபேசியில் பேசுவதற்கு முயற்சி செய்தார்.

ஆனால் சார்க் மாநாட்டுக்கு கொழும்பு வந்தபோது தமக்கு வழங்கிய உறுதிமொழிகள் தொடர்பில் எந்தவிதமான காத்திரமான நடவடிக்கையையும் எடுக்காத மகிந்தவுடன் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்த விரும்பாத இந்தியப் பிரதமர்மன்மோகன் சிங், மகிந்த தொலைபேசியில் பேச மேற்கொண்ட முயற்சியை நிராகரித்துவிட்டார்.

இதனையடுத்து இந்தியாவின் இந்து நாளேட்டின் ஆசிரியர் ராமின் ஊடாக இந்தியப் பிரதமரிடம் தனது முயற்சியை மேற்கொண்ட மகிந்த ஒருவாறு மன்மோகனுடன் சுமார் 45 நிமிடங்கள் பேசி தனது நிலைப்பாட்டை தெளிவு படுத்தினார்.

இந்தப் பேச்சின்போது இந்தியப் பிரதமர் உடனடி அரசியல் தீர்வாக ராஜீவ் -ஜே.ஆர் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு மகிந்தவை கோரியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## மனவேதனையில்...

பெரும் பரபரப்பு நிலவியது. இராஜினாமாக் கடிதத்தை அவர் எழுதிவிட்டதாக தகவல் வந்ததையடுத்து தி.மு.க அமைச்சர்கள் பலரும் தங்கள் நிகழ்ச்சிகளை இரத் துச் செய்துவிட்டு கோட்டைக்கு ஓடி வந்தனர்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கட்சிகள் ஒன்று திரள மறுப்பதோடு தன்னையே குறை கூறிவருவதால் அவர் இந்த முடிபை எடுத்ததாக கூறப்படுகிறது.

பின்னர் அன்பழகன்,ஆற்காடு வீராசாமி உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் முதல்வருடன் நெடுநேரம் பேசியபின்னரே அவர் தனது முடிபை அரைமனதுடன் கைவிட்டதாக தி.மு.க மற்றும் கோட்டை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் போரை உடனே நிறுத்த வேண்டும் என்றுதான் முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. இதுவரை அது சாத்தியப்படவில்லை. இதை பா.ம.கவின் இராமதாஸ் உள்ளிட்ட தலைவர்கள் சுட்டிக்காட்டியது முதல்வரின் மனதை வெகுவாகப் பாதித்ததாக கூறப்படுகிறது.

இலங்கைப் பிரச்சினையில் தமிழ்நாட்டிலுள்ள கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரள மறுக்கின்றனவே என்ற ஆதங்கத்தையும் அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தார்.

தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமாக் கடிதங்களை முதல்வரிடம் கொடுத்ததால் அதை கண்துடைப்பு நாடகம் என்று பிற கட்சித் தலைவர்கள் சாடியதும் அவருக்கு வேதனையை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.

இக்காரணங்களால் அவர் இராஜினாம்ாச் செய்ய முடிபெடுத்திருக்கக் கூடும் என்று தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

(ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.